விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 16 வியாழக்கிழமை (02.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ‘போர்க் குற்றம் தொடர்பான மற்றொரு அதிர்ச்சி வீடியோ’

### சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டது

(லண்டன்)

இறுதிப் போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை ஆதாரப்படுத்தும் வீடியோக்காட்சிகளை சனல் 4 தொலைக்காட்சி நேற்று முன்தினம் மாலை காண்பித்துள்ளது.

தம்மிடமுள்ள காட்சிகளில் இக் குற்றங்களில் ஈடுபடுபவர்களைத் தெளிவாக பார்க்கக் கூடியதாக உள்ளதால் அவர்களை அடையாளம் கண்டு கொள்வதில் சிரமமிருக்காது எனவும் சனல் 4 தெரிவித்துள்ளது.

இவ் வீடியோ காட்சியில் கைகள் பின்புறம் கட்டப்பட்டுள்ள நிலையில் வரிசையாக இளைஞர்களையும் யுவதிகளையும் சுட்டுக்கொல்லும் காட்சிகள் பதிவாகியுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் வெளியான ஒன்றரை நிமிட ஒளிப் பதிவின் தொடர்ச்சியாகவே இவ் ஒளி நாடாவும் அமைந்துள்ளது.

தம்மிடமிருக்கும் காணொளிக் காட்சிகள் மிகவும் குரூரமானவை எனவும், அவற்றில் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கும் உட்படுத்தப்படும் காட்சிகளும் பதிவாகி உள்ளதால் அவற்றினை ஒளி பரப்புவதை தாம் தவிர்த்துள்ளதாகவும், ஆனால் அதன் பிரதி ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் சனல் 4 தெரிவித்துள்ளது. மேலும் இப் பெண்கள் பாலியல் பலாத் (16ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4இன் வீடியோ காட்சியை இலங்கை அரசு நிராகரித்தது

(லண்டன்)

வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின்போது படைத் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் எனத் தெரிவித்து பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பு செய்த நிகழ்ச்சியை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்த வீடியோக் காட்சிகள் எதுவும் உண்மையல்ல எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயத்தை முன்னிட்டு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனவும் அரசாங்கம் கூறியுள்ளது.

இந்நிலையில் சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்த வீடியோ காட்சிகள் குறித்து பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சனல் 4 தொலைக்காட்சியின் ஒளிபரப்பு குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சனல் 4 தொலைக்காட்சி கடந்த வருடம் இதுபோன்றதொரு வீடியோ காட்சியை ஒளிபரப்புச் செய்திருந்தது. (16ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்ற விசாரணைக்கு ஐ.நா. அவசர கோரிக்கை

### மன்னிப்புச் சபையும் அறிக்கை

(லண்டன்)

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் யுத்தக் குற்ற செயற்பாடுகள் தொடர்பாக சனல் 4 தொலைக்காட்சி புதிதாக வெளியிட்டுள்ள ஆதாரங்கள் குறித்து உடனடியாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என சட்டவிரோத கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி பேராசிரியர் கிறிஸ்டொப் ஹேன்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநர் பிராட் அடம்ஸும் அறிக்கை வெளியிட்டுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்தில் குண்டுவெடிப்பு ஒருவர் உயிரிழப்பு; 16 பேர் படுகாயம்

### நுவரெலியாவில் சம்பவம்

(கொழும்பு)

நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் நேற்று பிற்பகல் 3.45 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 14 பொலிஸ் உத்தியோகத்தர்களும் 2 பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரொருவர் தன்னிடமிருந்த கைக்குண்டை வெடிக்கவைத்தமையாலேயே மேற்படி அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற ஒருவரை கஞ்சாவுடன் கைதுசெய்த பொலிஸார் நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் மேல் மாடியில் வைத்து அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

இவ்வேளையில் திடீரென கீழே ஓடிய அச்சந்தேக நபர் மறைத்து வைத்திருந்த கைக்குண்டை எடுத்து (16ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கடும் மழை!

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குபகுதியில் காணப்படும் குறைந்தளவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி நகர்ந்து கொண்டிருப்பதால் அடுவரும் 36 மணி நேரத்துக்கு இடியுடன் கூடிய மழை அல்லது கடும்காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இத்தாழ்வுப் பகுதி வடக்கு, வட மத்தி, கிழக்கு, வட மேற்கு மற்றும் ஊவா மாகாணப் பகுதிகளை தாக்கக் (16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புலனாய்வு வலுவான நிலையில்!

### உறுதிப்படுத்துகிறது பாதுகாப்புத் தரப்பு

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப் புலிகளின் புலனாய்வு வலையமைப்பு வலுவான நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதாக பாதுகாப்புத் தரப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் அடையாளம் கண்டறியப்படாத உண்மைப் பெயர் வெளிப்படாத தலைவர் ஒருவரின் தலைமையில் அவர்கள் முழுவீச்சில் இயங்கி வருவதாக தேசிய புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றத்தில் உறுதி செய்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் (16ஆம் பக்கம் பார்க்க)

## வலுத்தது தமிழரின் எதிர்ப்பு ரத்தானது ஜனாதிபதியின் உரை

(லண்டன்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட்டில் இன்று ஆற்ற இருந்த சிறப்பு உரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஒக்ஸ்போர்ட் யூனியன்அமைப்பு அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு தனது இணையத்தளத்தில் ஒரு அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

இந்த உரையை ஆற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி பிரிட்டனுக்கு வந்ததை பிரிட்டனில் வாழும் தமிழர்கள் வன்மையாகக் கண்டித்து விமான நிலையத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியிருந்தார்கள்.

இன்று உரையாற்றவிருந்த மன்றத்தின் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்த தமிழ் அமைப்புகள் சிலவற்றால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே அந்த உரை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் இரத்துச் செய்யப்படுவதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

பாது (16ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் தற்காலிக அமைதி நீடித்திருப்பது சந்தேகமே!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்காலிக அமைதி நிலையானது நீடித்திருக்கும் என்பதில் எவருக்குமே நம்பிக்கையில்லையென நல்லிணக்கத்திற்கான வடக்குக் கிழக்கு சர்வமத ஒன்றியம் தெரிவித்தது.

நேற்று மாலை கொழும்பில் இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளித்த ஒன்றிய உறுப்பினர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர். அங்கு தொடர்ந்து (15ஆம் பக்கம் பார்க்க)

## வந்தது பாம்பல்ல ‘நீல்’ இன மீன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி ஆற்றில் ஆயிரக்கணக்கில் பாம்பு வருவதற்கும் சுனாமி ஏற்படுவதற்கும் சம்பந்தப்படுத்தி வரும் தகவல்களில் எவ்விதமான உண்மையும் இல்லை என மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரி (15ஆம் பக்கம் பார்க்க)

## நிதி பெறும் அதிபர்கள் தொடர்பில் ஆதாரம் இருப்பின் நடவடிக்கை!

### வட மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(திருகோணமலை)

பாடசாலைகளில் மாணவர் அனுமதியின்போது நிதி பெறும் அதிபர்கள் தொடர்பில் ஆதாரத்துடன் பெற்றோர்கள் முறைப்பாடு செய்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் அரச, தேசியப் பாடசாலைகள் மாணவர் அனு (15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வெளிநாட்டு நிறுவனங்கள் உதவவேண்டும்

## யாழ்.அரச அதிபர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. அதற்கு வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி அவசியம் என யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவினருடனான சந்திப்பு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன் பின் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் மாவட்டத்தில் யுத்த காலத்தில் பாதிப்புற்று தற்போது மீளக் குடியமர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பகுதிகளில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் அபிவிருத்திகள் மேற்கொள்ளவேண்டிய பகுதிகளில் பண்ணைப் பாலமும் முக்கியமானது. இந்தப் பாலத்தின் ஊடாக நாளொன்றுக்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் பயணிக்கின்றனர்.

இவற்றோடு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு மறு வாழ்வுக்காக காத்திருக்கும் முன்னாள் போராளிகளுக்கு தொழில்வாய்ப்புக்கள். ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இவைதவிர யுத்தத்தால் பல பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தொழில்வாய்ப்புக்கு முதலீட்டு உதவிகளை வழங்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் 60 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. தற்போது 8 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணி முடிபடைந்துவிட்டது. ஏனைய வீடுகள் அமைப்பதற்கு உதவிகள் தேவைப்படுகின்றன.

யுத்தத்தில் வடபகுதி மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. அதற்கு வெளிநாட்டு நிறுவனங்களின் பணி அவசியமானது.

மக்களுக்கு அதிக தேவைகள் உள்ளன. அவர்களின் தேவைகள் நிச்சயம் பூர்த்திசெய்யப்பட வேண்டும். இவைதவிர வீதிகள், வடிகால்கள், மின்சார வசதிகள் என்பன பூர்த்தியாக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# தொலைபேசிகளுக்கான மாதாந்த கட்டணம் குறையும்?

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வரிகள் அகற்றப்பட்டமையால் நிலையான தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிகளுக்கான மாதாந்த கட்டணங்கள் 10 வீதம் முதல் 15 வீதம் வரை குறையுமென எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த வரிக் குறைப்பினால் நிலையான தொலைபேசி மற்றும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை அதிகரிப்பதுடன் தொலைத் தொடர்பு கைத்தொழிலிலும் பாரிய வளர்ச்சி ஏற்படுமென்று எதிர்பார்ப்பதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் அனுஷா பல்பிட்ட இன்று கூறினார்.

அரசாங்கம் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, கையடக்க தொலைபேசி பாவனையாளர் கட்டணம், நாட்டை கட்டியெழுப்புவதற்கான வரி என்பவற்றை தொலைபேசி சிட்டையிலிருந்து நீக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரையை புறக்கணிக்க மாணவர்கள் தீர்மானம்

## பல்கலைக்கழக தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று ஒக்ஸ்போர்ட்டில் நிகழ்த்தவுள்ள உரைக்கு போதுமான மாணவர்கள் வருகையை எதிர்பார்க்க முடியாதுள்ளதாக பல்கலைக்கழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் இன்றும் ஒக்ஸ்போர்ட்டிலும் பாரியதிர்ப்புஆர்ப்பாட்மொன்று நடைபெறவுள்ள நிலையில் அநாவசியமாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ள தாம் தயாராக இல்லை என்று இலங்கை மாணவர்கள் பலர் ஏற்பாட்டாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இன்னும் சிலர் ஜனாதிபதியின் உரையைப் புறக்கணிக்கும் முடிபிலும் உள்ளனர்.

அதன் காரணமாக ஜனாதிபதிக்கு நேரவுள்ள சங்கடத்தைத் தவிர்க்கும் பொருட்டு பிரித்தானியாவில் இருக்கும் இலங்கைச் சிங்கள மக்கள் அனைவரையும் இன்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற்கு வருகை தருமாறு லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கிடையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் என்பவற்றின் வேண்டுகோளின் பேரில் கலகமடக்கும் பொலிசார் உட்பட விசேட படையணிகள் இன்று ஒக்ஸ்போர்ட் வளாகத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படும் என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதிக்கெதிராக விமான நிலைய ஆர்ப்பாட்டத்தின்போது விடுதலைப் புலிகளின் கொடிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் பிரித்தானியாவில் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிக்கப்பட்டதற்கு ஆட்சேபத்தையும் தெரிவித்துள்ளனர். (ச-5)

# சத்திய சாயி சேவா நிலையத்தில் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2010 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டற் கருத்தரங்கு சேர்.பொன். இராமநாதன் வீதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள ஸ்ரீசத்தியசாயி சேவைநிலையத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சனிக்கிழமை கணித பாடம் தொடர்பாக யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் ரி.ஆர். கயூரன்,ஞாயிற்றுக்கிழமை தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக ஆசிரியர் இ.குமரன், திங்கட்கிழமை விஞ்ஞான பாடம் தொடர்பாக ஆசிரியர் தாஸ், செவ்வாய்க்கிழமை வர்த்தக பாடம் தொடர்பாக யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் எஸ்.சிவா, புதன்கிழமை ஆங்கில பாடம் தொடர்பாக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் பி.என். சுதர்சன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

இக் கருத்தரங்கில் பங்குபற்றுபவர்களுக்கு இலவசமாக வழிகாட்டல் கையேடுகளும் வழங்கப்படவுள்ளது. பரீட்சை எடுக்கவுள்ள மாணவர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு சாயி நிலையத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ச)




# அரசின் கருத்து வெளிவராது

(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையத் தளத்தினால் வெளியிடப்பட்ட தரவுகள் குறித்து அரசாங்கம் எவ்வித கருத்துக்களையும் வெளியிடாது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இராஜதந்திர உறவுகள் தொடர்பில் எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடத் தயாரில்லை என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்திற்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்திற்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட 3166 ஆவணங்கள் தொடர்பில் அண்மையில் விக்கிலீக்ஸ் பரபரப்புத் தகவல் வெளியிட்டிருந்தது. (ச-5)

# கேள்வி விண்ணப்பம் கோரல்

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரினால் விலங்கு விசர் நோயை தடுப்பதற்காக பெண் நாய்களை மலடாக்கும் திட்டத்திற்காக 2011 ம் ஆண்டிற்கு கேள்வி விண்ணப்பம் கோரல்.

**தகைமைகள்**

அரச கால்நடை வைத்தியராக பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

01) பெண் நாய்களின் கருப்பையினை ஆபிரேசன் செய்து வெளியேற்றப்படல் வேண்டும்.
02) யாழ்.மாவட்டத்தில் எப் பகுதியிலும் சென்று கடமையாற்ற வேண்டும்.
03) ஆபிரேசன் செய்யப்பட்ட நாய்களின் வலது காதில் Tatoo இலக்கம் பொறிக்க வேண்டும்.
04) ஆபிரேசன் செய்த பின்னர் உயிருடன் செல்வதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
05) கட்டாக்காலி நாய்களைப் பிடித்து ஆபிரேசன் செய்வதற்கு உரிய தொழிலாளர், வண்டில் போன்றவற்றை ஒழுங்கு செய்ய வேண்டும்.
06) சத்திர சிகிச்சைக்கு உதவியாளரைக் கொண்டு வருதல் வேண்டும். சத்திர சிகிச்சையின் பின் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் புதைக்கப்படல் வேண்டும்.
07) பிரயாண வாகன ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.
08) 8.00 மணி முதல் 4.30 வரை கடமையாற்ற வேண்டும்.
09) விழிப்புணர்வினை ஏற்படுத்தவும், நிலையங்களை ஒழுங்குசெய்யவும் பொது மக்களின் தொடர்பாடலுக்குமான வெளிக்கள உத்தியோகத்தருக்கான செலவுகள்.
10) சத்திர சிகிச்சைக்கான சகல விதமான மருந்துகளிற்குமான செலவுகள்.
11) மிருகத்தின் வலியினைக் குறைப்பதற்கும் இரத்தப் போக்கினை குறைப்பதற்குமான நவீன மருந்துகள் தரமானவை பாவிக்கப்படல் வேண்டும். சத்திர சிகிச்சையில் ஏதாவது முறைப்பாடுகள் செயல்பாட்டில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படின் கேள்விப்பத்திரம் இரத்துச் செய்யப்படலாம்.

மேற்குறிப்பிட்ட சகல செலவுகள் உட்பட ஒரு பெண் நாய்க்கு ஆகக் குறைந்த கேள்வித் தொகை கோரப்படுகிறது. இதற்கான விண்ணப்பத்தினை 15.12.2010 ற்கிடையில் மேற்படி காரியாலயத்தில் பெற்று 10.01.2011 ற்கிடையில் அனுப்பிவைக்கவும். கடித மேலுறையில் பெண் நாய்களுக்கான கருத்தடை கேள்வி விபரம் என எழுதப்படல் வேண்டும்.

**வைத்திய கலாநிதி**
**ஆ.கேதீஸ்வரன்**
**[illegible]பணிப்பாளர்.**

(சி-1718)

Sale Sale Sale Sale

# மாபெரும் மலிவு விற்பனை



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு 01.12.2010 முதல் 01.01.2011 வரை சகல விதமான றெடிமேற் ஆடைகள். ஆண் பெண் இரு பாலாருக்கும் உரிய பாடசாலை சீருடை துணிவகைகள் என்பவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

**லைடன் புடவை நிலையம்**
**410, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக)**
**யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இல : 021 222 2381** (சி-1703)

# வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் பகிரங்க ஏல விற்பனை

எமது பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின பொது நூலகத்திலிருந்து கழற்றப்படும் கூரை மரங்கள், கதவுகள், யன்னல்கள், ஓடுகள் என்பன 08.12.2010 ஆம் திகதி மு.ப 10.30 மணியளவில் குறித்த நூல் நிலையம் அமைந்த வளவினுள் வைத்து ஏலத்தில் விற்கப்படவுள்ளது. இவ் ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 2500.00 ஐ செலுத்துதல் வேண்டும்.

மற்றும் அன்றைய தினம் அலுவலக வளவினுள் உள்ள பனை மரங்கள் 19 ஏலத்தில் வைத்து விற்கப்படவுள்ளன. இவ் ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 2000.00 ஐ செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப் பணங்கள் யாவும் மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

சித்தியெய்திய கேள்விக்காரர் உடனடியாக முழுத்தொகையையும் செலுத்துவதுடன் ஒரு கிழமைக்குள் சகல பொருட்களையும் நூலக வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**செயலாளர்.**
**வலி தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(சி-1719)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## முயற்சி தேவை

ஊருக்கு வெளியில் அமைதியான ஓர் இடம். அங்கே ஒரு ஆச்சிரமம். அதில் ஒரு சாமியார் இருந்தார். அவர் தினமும் நல்ல போதனைகளையெல்லாம் சொல்லுவார். பலர் அங்கு தங்கியிருந்து, அவர் சொல்லும் அறிவுரைகளை கேட்பது வழக்கம்.

ஒரு நாள் அவரைப் பார்த்து விட்டுப் போக மூன்று வெளிநாட்டுத் தம்பதிகள் வந்தார்களாம்.

அந்த மடத்திலேயே சாப்பிட்டுக் கொண்டு தங்கியிருந்து அவருடைய போதனைகளைக் கேட்டுக்கொண்டு போக வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கம் .காலையில் குளித்து விட்டு பூஜையில் உட்கார்ந்தார் அந்தச்சுவாமி. இவர்களும் குளித்துவிட்டு அந்தப் பூஜையைப் பார்ப்பதற்காக அவருக்கு முன் வந்து உட்கார்ந்தார்கள். பூஜை ஆரம்பமானது. சம்பிரதாயப்படி அது நீண்ட நேரம் நடந்து கொண்டிருந்தது.

இவர்களுக்கு நல்ல பசி இருந்தாலும் அதைக்காட்டிக் கொள்ளாது பேசாமல் இருந்தார்கள். அந்த சுவாமி பூஜையை முடித்தார். அதன் பின் பேச ஆரம்பித்தார். பேச்சு அருமையாகத்தான் இருந்தது. அமிர்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இவர்களுக்கு இருக்கும் வயிற்றுப்பசி அதைச் சரியாகக் கவனிக்க விடவில்லை. அந்தச் சுவாமியும் இதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்கு மனதுக்குள் ஓர் எண்ணம் .

"உள்ளே சாப்பாடு தயாராகிக்கொண்டு இருக்கிறது போல இருக்கிறது. இந்தப்பேச்சு முடிந்ததும் நம்மை உள்ளே அழைத்துக் கொண்டு போவார்" என்று ஒரு நினைப்பு.ஆனால் சுவாமி இதைப் பற்றி எதுவும் பேசவில்லை. கண்டு கொள்ளவில்லை. ஒரு அம்மாவால் அதற்கு மேல் சும்மா இருக்க முடியவில்லை. "சாப்பாட்டை ஆரம்பிக்கலாமா?'' என்று மெதுவாக் கேட்டார். ''ஓ...கவனிக்கலாமே " என்று உள்ளே அழைத்துக்கொண்டு போனார் சுவாமி. இவர்கள் மிகவும் அவசரமாக எழுந்து உள்ளே ஓடினார்கள். அங்கே ஒரு மேஜையின் மீது ஒரு கிண்ணம் மூடியிருந்தது.

"ஓ...இது தான் சாப்பாட்டு மேஜை போலிருக்கிறது. இங்கே சாப்பாடு வந்துவிடும்" என்று நினைத்தார்கள். உடனே போய் சுற்றி உட்கார்ந்தார்கள்.

சுவாமி அந்தக் கிண்ணத்தை எடுத்து அந்த அம்மாவிடம் கொடுத்தார். உடனே அவர் அதை வாங்கி மூடியைத் திறந்து பார்த்தார்.உள்ளே ஒரு திறப்பு இருந்தது.

"ஓ... சரிதான்... இதுசமையலறையின் திறப்பு போலிருக்கிறது. அங்கே போய் அதைத் திறந்து சாப்பாட்டை நாம் எடுத்துக் கொண்டு வந்து இங்கே வைத்துச் சாப்பிடவேண்டும் போலிருக்கிறது" என்று நினைத்தார்கள்.

திறப்புஇருக்கல்லவா? வாங்க பூட்டிய அறையைக்காட்டுகிறேன் என்று சுவாமி அவர்களை அழைத்துக்கொண்டு போய்க் காட்டினார்.

இவர்கள் அந்த அறையை மிகவும் ஆவலுடன் திறந்தார்கள். உள்ளே பார்த்தால்....அங்கே...

அரிசி,பருப்பு, விதவிதமான காய்கறிகள் எல்லாம் இருந்தன. சமையலுக்கு வேண்டிய மிளகாய்,எண்ணெய்,பால்,தயிர், நெய் இப்படி எல்லாமே அங்கு இருக்கின்றன. அடுப்பு, விறகு, நெருப்புப் பெட்டி கூட அங்கு இருக்கின்றன.

சாப்பாடு தயாராக இருக்குமென்று நினைத்துக்கொண்டு போன இவர்கள்,இதையெல்லாம் பார்த்ததும் சோர்ந்துபோய் விட்டார்கள்.

"சுவாமிஎன்ன இது? சாப்பாடு இல்லையா?" என்றார்கள். "அது தான் சாப்பாட்டுக்கு வேண்டிய எல்லாம் இங்கே இருக்கிறதே.... அடுப்பு மூட்டி, நீங்கள்தான் அவரவர் ருசிக்குத் தகுந்தாற் போல் சமைக்க வேண்டும் "என்றார் சுவாமி.

''சாப்பாடு தயாராக இருக்குமென்று நாங்கள் எதிர்பார்த்தோம் "என்றார்கள் இவர்கள்.

''நீங்கள் இப்படி சொல்லுவீர்கள் என்று நானும் எதிர்பார்த்தேன். இதுவரைக்கும் நான் எவ்வளவோ தத்துவமெல்லாம் எடுத்துச் சொன்னேன். எல்லாவற்றையம் விட இதுதான் அனுபவ பூர்வமான தத்துவம். ஆண்டவன் நமக்கு நல்ல மனத்தைக் கொடுத்திருக்கிறான். நல்ல வாய்ப்புக்களையும் தந்திருக்கிறான். அதையெல்லாம் பயன்படுத்தக்கூடிய மூளையையும் சிந்தனையையும் கொடுத்திருக்கிறான். ஆனாலும் அடுப்பை நீங்கள்தான் மூட்ட வேண்டும். உங்களுக்கு உகந்ததை நீங்கள்தான் சமைத்து ருசித்து அனுபவிக்க வேண்டும். ஆண்டவன் அதைச் செய்யமாட்டான்'' என்றாராம் அந்தச் சுவாமி.

"நம்முடைய வாழ்க்கையில் நல்ல பயன்களைப் பெற நாம்தான் முயற்சி செய்ய வேண்டும். அதற்குரிய சூழ்நிலையைத்தான் ஆண்டவன் கொடுப்பான். அதை விளக்குவதற்காகத்தான் அந்த சுவாமி அப்படிச் செய்து காட்டினார்" என்று விளக்கம் கொடுத்தார் ஒரு பெரியவர்.(சுவாமி சின்மயானந்தர் )

அதன்பின் அந்தமூன்றுதம்பதிகளும்தெளிவடைந்து விட்டார்களாம். நாம் தெளிவடைவது எப்பொழுது? இந்தக் கதையை என்னுடைய நண்பன் ஒருத்தனிடம் சொன்னேன். அவன் ரொம்ப சந்தோசப்பட்டான்.

"நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனாலும் நான் அதைவிட ஒருபடி மேலேதான். எனக்கெல்லாம் அரிசி,பருப்பு இருக்கிற அறை எதுவென்று காட்டிவிட்டால் போதும். கிண்ணத்திலிருந்து சாவியை எடுத்துக்கொடுக்க வேண்டும் என்ற அவசியம் கூட இல்லை" என்றான்.

"அப்படியென்றால்எப்படிடா றூமைத்திறப்பாய்? "என்று கேட்டேன்.

''பூட்டை உடைத்துத் திறந்து விடுவேன். அதுதான் எனக்குப் பழக்கம்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருமறைக் கலாமன்ற தினம் நாளை கொண்டாடப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத் தினம் நாளை வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் திருமறைக்கலாமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருமறைக் கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 45 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு இம்முறை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமறைக் கலாமன்ற தின நிகழ்வுகளில் இலங்கையில் தமிழ்-சிங்கள பிராந்தியங்களில் இயங்கும் இருபது திருமறைக் கலாமன்றங்களின் இணைப்பாளர்களும் ஆளுநர் சபை உறுப்பினர்களும் கலைஞர்களும் பங்கேற்கவுள்ளார்கள்.

நாளைக் காலை 7 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும் வழிபாட்டு நிகழ்வுடன் திருமறைக் கலாமன்ற தின நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடந்து முற்பகல் 10 மணிக்கு கலைத்தூது மணி மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும். அதன் பின்னர் திருமறைக்கலாமன்ற இணைப்பாளர்கள், ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல் இடம்பெறும்.

கலைநிகழ்வுகள் மாலை 6.15 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் ஆரம்பமாகும். இதில் பிராந்திய திருமறைக்கலா மன்றக்கலைஞர்களின் பல்வேறு நடன நிகழ்வுகள் கவிஞர் ஜின்னா சரிபுதினின் கவிதைச் சரம், யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் நாட்டிய நாடகம் உட் பட பல நிகழ்வுகள் இடம்பெறும். (ஶ்ரீ)

# கருத்தரங்கு

(வல்வெட்டித்துறை)

வல்வை அபிவிருத்திக்கான செயலணியினரால் நடத்தப்படும் கல்விப் பொதுத்தராதர சாதாரண மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் மாணவர்களை கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஶ்ரீ-63)

# சாதாரண தர மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

யாழ். வலய பாடசாலைகளிலிருந்து க.பொ.த. சாதாரண பரீட்சைக்கு தோற்றவுள்ள இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் யா/ கனகரத்தினம் ம.ம.வி. இல் நடைபெறவுள்ளது.

உரிய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஶ்ரீ)

## டெங்கு தடுப்பு வாரத்தை முன்னிட்டு

# சகல இடங்களிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு நேற்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் டெங்கு பரப்பும் நுளம்புகள் பெருகும் இடங்களைப் பார்வையிட்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை சகல அரச,அரசசார்பற்ற நிறுவனம்களிலும் நாளை வெள்ளிக்கிழமை சகலபாடசாலைகளிலும் நாளை மறுநாள் சனிக்கிழமை வர்த்தக நிலையங்கள், நகர் பகுதிகள், மயானங்களிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது அத்துடன் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வணக்கத்தலங்களிலும் ஆறாம் திகதி திங்கட்கிழமை சகல வீடுகள் மற்றும் குடியிருப்புக்களிலும் ஏழாம் திகதி செவ்வாய் கிழமை பராமரிப்பின்றியுள்ள காணிகள் வீடுகளிலும் டெங்குகள் கட்டுப்பாட்டுநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (ஶ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 80 |
| தக்காளி | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 70 |
| கரட் | 60 | 100 | 40 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 170 | 160 |
| பாகற்காய் | 140 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 |
| பயற்றங்காய் | 140 | 160 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 70 | 80 | -- |
| கறிமிளகாய் | 160 | 170 | 150 |
| முருங்கைக்காய் | 250 | -- | 160 |
| போஞ்சி | 120 | 130 | 80 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 |
| தேங்காய் ஒன்று | 40 | 40 | 35-40 |

# இராசி பலன்

*02.12.2010*
*(கார்த்திகை 16, வியாழக்கிழமை)*
*துவாதசி பின்னிரவு 3.51 மணிவரை*
*சித்திரை முன்னிரவு 9.31 மணிவரை*
*இராகு காலம் 1.45-3.15 மணிவரை*
*சுபநேரம் 7.45-9.15 மணிவரை*
*வைஷ்ணவ ஏகாதசி விரதம்*

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், விலகிச்சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், உத்தியோக உயர்வுண்டு, தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய சிலரை சந்திக்கும் சந்தர்ப்பமுண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உயரதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்** தொழிலை விஸ்தரிப்பதற்கான புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், மனதில் நீண்டகாலமாக இருந்த சுமை குறையும், பிரயாண சுகமுண்டு, சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**சிங்கம்** எதிர்கால வளர்ச்சிக்கு நண்பர்களின் ஆலோசனை உறுதுணை புரியும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்வீர்கள், சுவாரஸ்யமான நாள்.

**கன்னி** வெளி வட்டாரத் தொடர்புகள் விரிவடையும், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மை, இனிய சம்பவங்கள் நடைபெறலாம்.

**துலாம்** குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், கொடுத்த வாக்கை காப்பாற்ற சில விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்வீர்கள், தேகநலனில் கூடிய அக்கறை தேவை.

**விருச்சிகம்** குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், காரிய அலைச்சலுண்டு, சயன சுகக் குறைவு ஏற்படலாம்.

**தனுசு** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பெண் வழி பிரச்சினை அகலும், பெரியோர் சந்திப்புண்டு, வருமானம் அதிகரிக்கும் நாள், உடல்நலம் சீராகும்.

**மகரம்** உதிரிவருமானங்கள் வந்து சேரும், ஆரோக்கிய நலன் கருதி சிறு தொகையை செலவு செய்வீர்கள், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்பு உங்களிடமே வந்து சேரும்.

**கும்பம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் சிறிது தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நாள், உறவினர்களிடம் விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**மீனம்** பிரயாணத்தில் கூடிய கவனம் தேவை, மறதியினால் சில சிரமங்களுக்குட்பட நேரிடலாம், போசன சுகமுண்டு, எதிர்பாராத சில பகையுணர்வு ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிகண்டிப் பகுதியில் நாளை 150 குடும்பங்கள் மீள் குடியேற்றம்

## முல்லைத்தீவு அரச அதிபர் தகவல்

முறிகண்டிப் பகுதியில் நாளை வெள்ளிக் கிழமை 150 குடும்பங்கள் மீளக் குடியமர்த் தப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரி வித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் எஞ்சியுள்ள சுமார் 6ஆயிரம் குடும்பங்களை இந்த மாத இறுதிக்குள் தங்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த தேவையான சகல நடவ டிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் இதுவரை 22 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 62 ஆயிரம் மக்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இம் மாவட்டத்தில் உள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு,ஒட்டுசுட்டான், கரைதுறைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய 5 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 6ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 19 ஆயிரம் பேர் மாத்திரமே மீளக் குடியமர்த் தப்படவுள்ளனர் என்றும் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோ சனைக்கமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் வழிகாட்டலில் இதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள தேராவில் கிராம சேவகர் பிரிவில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 722 மக்கள் குடியமர்த்தப்பட்ட தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பரிசளிப்பு விழா

(கரவெட்டி)

நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் நா.தேவராஜா தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந் தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி த.தபேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக இலங்கை மெத டிஸ்த திருச் சபையின் முகாமைக் குரு அருட்திரு த.அருள்நாதன் கலந்து சிறப்பிக் கவுள்ளார்.

பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-24)

# தென்கொரியாவில் மாடியிலிருந்து வீழ்ந்து இலங்கையர் மரணம்

தென்கொரியாவில் பணியாற்றிய இலங் கையர் ஒருவர் 7 மாடிக் கட்டடத்திலிருந்து வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

கொரிய அதிகாரிகள் இது தொடர்பாக தமக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள் ளதாகத் தென் கொரியாவிலுள்ள இலங் கைத் தூதுவர் லக்ஷித ஹெட்டிஆராச்சி தெரி வித்துள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு தொழில் வாய்ப்புப் பெற்று தென்கொரியா சென்ற அரநாயக்க பகுதி அலகல்ல என்ற இடத்தைச் சேர்ந்த நிஷாந்த குமார எட்டம்பாவெல என்ற 33 வயதான ஒருவரே இவ்வாறு மரணமா னார்.

எனினும் இவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதையடுத்து அந்த நாட்டு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணை முடிவடைந்த பின்னரே இறந் தவரின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப் படுமெனத் தெரிகிறது. (ஸ்ரீ-2)

# சவுதி அரேபியாவில்

## பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பத்து இலங்கையர்கள் முறைப்பாடு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டு வேலை செய்ய நிர்ப் பந்திக்கப்பட்டதாகப் பத்து இலங்கையர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஊடகமொன்றுக்கு அவர்கள் அளித் துள்ள தகவல்களிலேயே இதனைத் தெரிவித் துள்ளனர்.

தங்களது விருப்பத்திற்கு மாறாக றியாத் தில் உள்ள ஒரு கம்பனியில் தடுத்து வைக் கப்பட்டு வேலை வாங்கப்பட்டதாகவும் ,இந்த இடம் மிக மோசமான சூழலைக்கொண்டி ருந்தது என்றும் அவர்கள் கூறினர்.

இவர்கள் 10 பேரும் கொழும்பு மருதானையில் உள்ள ஒரு தனியார் வே[illegible] வாய்ப்பு முகவர் நிலையத்தின் ஊடாக சவுதி அரேபியாவுக்குச் சென்றவர்கள் ஆவர்.

தங்களது நிலைமை குறித்து இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் அவர் கள் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இது குறித்து சவுதியில் உள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,தங்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விரைவில் நடவ டிக்கை எடுக்கப்படும் என்றும்,தூதரக தொழில் உறவு அதிகாரி சுஜீவ திஸநாயக்க கூறினார். (ஸ்ரீ)

# 15 வயதுச் சிறுமிக்குத் திருமணம்; ஹபரணை பொலிஸார் விசாரணை

ஹபரணை மொரகஸ்வெவ பகுதியில் 15 வயதுடைய சிறுமியொருவருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்ட சம்பவம் குறித்து ஹபரணைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

குறித்த சிறுமியின் தாயார் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவருக்கு இச் சிறுமியைத் திருமணம் செய்து கொடுத்தள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

திருமணப் பதிவின்றியே இளைஞரிடம் ஒப்படைக்கப்பட்ட இச்சிறுமி தற்போது 3 மாதக் கர்ப்பமாக உள்ளதாகவும் குறித்த சிறுமி இதற்கு முன்னர் ஊர்காவற் படைவீரர் ஒருவரைத் திருமணம் செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்படை வீரருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகப் பெற்றோரிடம் திரும்பி வந்த சிறுமியை அவரின் தாயார் மாத்தளை இளைஞருக்கு மணமுடித்துக் கொடுத்துள் ளார்.

இச்சம்பவம் தொடர்பாகச் சிறுமியின் முதல் திருமணத்தைப் பதிவு செய்த விவாகப் பதிவாளர் சிறுமியின் தாய் இரண்டாவதாகத் திருமணம் செய்த இளைஞரின் தாய் ஆகியோரைப் பொலிஸார் கைது செய்துள் ளனர். (ஸ்ரீ-2)

# சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ் வுகள் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும்.

இதில் ''மாற்று வலுவுள்ளோரை வலு வூட்டல்'', ஜெய்ப்பூர் நிறுவன பயனாளியின் உரை, மாற்று வலுவுள்ளோரின் நடனம், இந் நிறுவனத்தின் தயாரிப்புக்களின் கண்காட் சியும் விழிப்புணர்வு குறுந்திரைப் படக் கண்காட்சியும் கலைநிகழ்வுகளும் இடம்பெற வுள்ளதாக யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன முகாமைத்துவக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ -2)

# பாதுகாப்பு தொழில் நுட்ப பாடத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

பாடசாலைகளில் 9ஆம் தரத்தில் இருந்து பாதுகாப்பு தொழில்நுட்பம் என்ற பாடத் திட்டத்தை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுத்துவருவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற ஒத்தி வைப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக்குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் கிராமங்கள் தோறும் பயன் தரு மரங்களை வழங்கி வருகின்றது. இதன் முதல் கட்டமாக அல்லாரை வெள்ளாம்போக்கட்டி மாதர் சங்க கட்டடத்தில் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் எம்.ஜே.எவ்.மரத்தை நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப் பதையும் அருகில் கழகத் தலைவர் லயன் எஸ்.தேவகுமார், லயன் ஏ.கலைச்செல்வன்,முன்னாள் தலைவர் ,கிராம சேவையாளர், மாதர் சங்கத் தலைவி, செயலாளர்கள் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

# கடமையிலிருந்த பொலிஸாரை தாக்கிய சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

கடமையில் இருந்த பொலிஸாரை தாக் கிய இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவா உத்தரவிட் டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 29ஆம் திகதி திங்கட்கிழமை அல்வாய் வடக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கசிப்பு உற்பத்தி செய்வதாக பொலிஸா ருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நான்கு பேர் கொண்ட பொலிஸ் குழு சிவில் உடையுடன் சம்பவ இடத்திற்கு சென்றுள்ள னர்.

அங்கு சென்ற பொலிஸார் குழு தாம் பருத்தித்துறை சூழல் பாதுகாப்பு பொலிஸ் பிரிவில் இருந்து வருவதாக கூறி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட சமயம் இரு சந்தேக நபர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதம் முற்றுப்பெற சந் தேக நபர்கள் பொலிஸாரை தாக்கியுள்ள னர்.

இரு சந்தேக நபரையும் நேற்று முன் தினம் பொலிஸார் மன்றில் முற்படுத்திய வேளை வழக்கை விசாரித்த நீதவான் முன்னிலையில் பொலிஸார் நான்கு குற்றச்சாட்டுக்களை முன் வைத்தனர்.

இக்குற்றச்சாட்டுக்களில் அரச கடமையை நிறைவேற்ற விடாமல் தடுத்தமை ,தகாத வார்த்தைகளை பிரயோகித்தமை,அரச கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, தாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள் ளார். (ஸ்ரீ-24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கோப்பு வாழ்க்கைமுறை மாற்றமடைந்தமையே யாழ்.மாவட்டத்தில் எயிட்ஸ் நோய் பரவக் காரணம்



## வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு

உலகில் இதுவரையும் எயிட்ஸ் நோயால் 25 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். அதாவது இரண்டரைக் கோடி மக்களை இந்த நோய் காவு கொண்டுள்ளது என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உலக எயிட்ஸ் தின நிகழ்வு நேற்று தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1981 ஆம் ஆண்டு தான் எயிட்ஸ் நோயாளி அமெரிக்காவில் இனம் காணப்பட்டார். மனித குலத்திற்கு அழிவினை ஏற்படுத்தும் பல நோய்கள் இனம் காணப்பட்டு அவற்றிற்கு சிகிச்சைகள் மூலம் குணப்படுத்தப்பட்டு வந்தாலும் எயிட்ஸ் நோய் ஏற்படுவதையும் அதன் பாதிப்பில் இருந்து மனித குலத்தை காப்பாற்றவும் இதுவரைக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

உலகத்தில் 134 மல்லியன் பேர் இந் நோய் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர். நாள் ஒன்றிற்கு உலகத்தில் 6ஆயிரம் பேர் எயிட்ஸ் நோய் தொற்றுக்குள்ளாகின்றனர். இவை தவிர கடந்த வருடம் மட்டும் 18 இலட்சம் பேர் எயிட்ஸ் நோயால் இறந்துள்ளனர்.

மதிப்பீட்டின் அடிப்படையில் இலங்கையில் 216 பேர் எயிட்ஸ் நோயால் இறந்துள்ளனர். இதேவேளை 3ஆயிரம் பேர் இனம் காணப்பட்டுள்ளனர். இவைதவிர யாழ். மாவட்டத்தில் 42 எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப் பட்டுள்ளனர். இதில் 23பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்.மாவட்டத்தில் எயிட்ஸ் நோய் பரவுவதற்கு காரணம் தரைவழிப்பாதை திறந்தமையே. இதனால் யாழ். மாவட்டத்திலிருந்த கட்டுக்கோப்பு வாழ்க்கை முறை முற்றாக மாற்றமடைந்து கலாசார சீர்கேடுகள் பெருகியுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு வெளிநாடுகளிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் பெருந்திரளானவர்கள் வருகை தருவதோடு இங்கிருந்து வெளிமாவட்டத்திற்கும் வெளிநாடுகளிற்கும் பயணிப்பவர்கள் அதிகமாகவுள்ளனர். இதனால் நோய் பரவும் சாத்தியக் கூறுகள் அதிகரித்து விட்டன.

வெளிநாட்டிலிருந்தோ, வெளி மாவட்டங்களிலிருந்தோ வருகை தருபவர்கள் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையோ அல்லது வெளிநாடுகள் மற்றும் வெளிமவாட்டத்திற்கு சென்றுவரும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நோய் தொற்றியுள்ளதை அறிவது கடினமான விடயம்.

எயிட்ஸ் நோயால் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவதற்கு 10 வருடங்கள் தேவை. 10 வருடத்தின் பின்பே அவர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

யாழ்.மாவட்டத்தில் எயிட்ஸ் கிருமிகள் அதிகமாக பரவியுள்ளதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது மாவட்டத்தின் கலாசாரத்தையும் விழுமியத்தையும் பாதுகாத்து அதன்படி நடந்தால் இத்தகைய நோயிலிருந்து உயிர் தப்பிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# நிர்வாக சபைத் தெரிவு

(மருதங்கேணி)


தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் தலைவர் க.வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாக சபை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக க.வேணுகோபால், உப-தலைவராக சு.சிவபாதசுந்தரம், செயலாளராக ந.கணேசலிங்கம், உப-செயலாளராக சு.கணபதிப்பிள்ளை, பொருளாளராக க.வீரகத்திப்பிள்ளை, கணக்காய்வாளராக எஸ்.கே.சற்குணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 9 பேர் கொண்ட நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. (ஸ்ரீ-2-35)

# பாரத்துடன் வந்த லொறி பாலத்திற்குள் விழுந்தது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அச்சுதன் குளப் பகுதியில் லொறி ஒன்று பாலத்தினுள் விழுந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவுவேளையில் இடம் பெற்றுள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது, மேற்குறித்த பாலத்தினூடாக கற்கள் ஏற்றி பாரத்துடன் வந்த லொறி பாலம் உடைந்ததில் அப்படியே பாலத்தினுள் விழுந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது எவருக்கும் காயம் ஏற்படவில்லையெனவும் அண்மையில் பெய்த மழையினால் பாலம் சற்று கீழ் இறங்கிக் காணப்பட்டதாகவும், இரவில் லொறி வந்தமையினால் இதனை அவதானிக்கவில்லை என்றும் அப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இப்பகுதியால் போக்குவரத்து செய்வது முற்றாகத் தடைப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ஸ்ரீ-5-2)

# சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும்

கந்தர்மடம் யுனி ஐசிரி கம்பஸ் பிறைவேட் லிமிடெட் நிறுவனத்தில் கல்வி கற்ற முதல் பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ்கள் யாவும் "நோட்டிங்ஹாம் கல்லூரி லண்டன்" நிறுவனத்தால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. சான்றிதழ் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

மகேஸ்வரன் விமல்ராஜ் (கொக்குவில்), லட்சுமணன் வசந்தி (ஆனைக்கோட்டை), வசந்தகுமார் தட்சாயினி (கொக்குவில்), ஸ்ரீராஜேந்திரா சவுந்தரி (வல்வெட்டித்துறை), பஞ்சலிங்கம் கஜீவன் (சுழிபுரம்), சண்முகரட்ணம் சித்தார்த்தன் (யாழ்ப்பாணம்), ஸ்ரீஸ்கந்தராஜா கணாதீபன் (இணுவில்), வலன்சியா டேவிட் (கலட்டி, யாழ்ப்பாணம்), சிவபுத்திரன் லவதீபன் (யாழ்ப்பாணம்).

மேற்படி மாணவர்கள் நிறுவனத்திற்கு வருகை தந்து தமது சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# கடந்த காலங்களில் கடத்தல்களில் ஈடுபட்டோரே தற்போதைய கடத்தல் சம்பவங்களுக்கும் காரணம்



## மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

வத்தளையைச் சேர்ந்த குணரெத்தினம் மற்றும் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பெர்னாண்டோ என்ற இரு தமிழ் வர்த்தகர்கள் அண்மையில் காணாமல்போய் பின்னர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவங்களுக்கும், கடந்த காலம் கடத்தல்களில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்தாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு சம்பவங்களும் தலைநகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஒரு வாரத்திற்குள் நடைபெற்றுள்ளன. மர்மமான முறையில் நடைபெற்றுள்ள இந்த இரண்டு சம்பவங்களும் தலைநகர் தமிழர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றின் பின்னணியில் கடந்த காலங்களில் செயற்பட்ட கடத்தல் கும்பல்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு இருக்கின்றது.

பொலிஸ் மா அதிபர் இந்த இரண்டு மரணங்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் விசாரணைகளை கண்காணித்துக் கொண்டிருக்கிறோம் என ஜனநாயக மக்கள் முன்னணித்தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கைதடியில் மூன்று கடைகள் — நள்ளிரவில் திருட்டு —

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்தியிலுள்ள மூன்று கடைகள் கடந்த திங்கட்கிழமை · இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

மதுபானசாலை, நகைக்கடை மற்றும் பலசரக்கு விற்பனை நிலையம் என்பனவற்றிலேயே திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவற்றிலிருந்த பெறுமதிவாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் கைரேகைகளையும் பதிவு செய்துள்ளனர். (எ)

# பூநகரியில் இலவச நடமாடும் சேவை

(பூநகரி)

கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை நடமாடும் சேவையொன்று பூநகரி கறுக்காய் தீவு மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் திருமணப் பதிவு, பிறப்பு,இறப்பு பதிவுகள் ஆகியவை மேற்கொள்ளப்படுவதால் அப்பகுதி வாழ் மக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கிராம சேவையாளர் எம்.ராஜகோபால் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாகன விபத்தில் இரு இளைஞர்கள் பலி; பரந்தன் -பூநகரி வீதியில் சம்பவம்

(பூநகரி)

பரந்தன் - பூநகரி வீதியில் ஓவசியர் கடைச்சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 6.50 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் இனந்தெரியாத வாகனம் ஒன்று பரந்தனில் இருந்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களுடன் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியாவில் இருந்து 4.15 மணிக்கு புறப்பட்ட பஸ் ஒன்று பரந்தன் ஊடாக பூநகரிக்கு வரும் வேளையில் 2 கி.மீ.தொலைவில் கொலையுண்ட இருவரையும் குறித்த பஸ்ஸின் சாரதி கண்டுள்ளார். இதனையடுத்து பஸ்ஸை நிறுத்திவிட்டு குறித்த சாரதி கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அங்கு வருகை தந்த பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தால் இரவு 8 மணிக்கு பூநகரிக்கு வரவேண்டிய பேருந்து 2 அரை மணிநேரம் தாமதமாகி வந்ததுடன் பேருந்தில் பயணித்த பயணிகள் கொட்டும் மழையில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டனர். (ஸ்ரீ-84)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் சகல சமாசங்களுடனும் இணைந்து இயங்காத சனசமூக நிலையங்களை இயங்கவைப்பதும், முன்பள்ளிகளை நல்ல முறையில் செயற்பட ஊக்குவிப்பதும், கிராமங்களை அபிவிருத்தி அடையச் செய்யும் நோக்கத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியிலுள்ள உள்ளூராட்சி தலைமை அலுவலகத்தில் நடத்தவுள்ளது.

எனவே, இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் சமுகளிக்கும் போது எதிர்கால வேலைத் திட்டங்களுடன் வருமாறு இச் சம்மேளனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இளவாலை யா/ மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையில் தேசிய மரநடுகை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களால் சுற்றாடல் கீதம் இசைக்கப்படுவதையும் யாழ். தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர் க.இ. கமலநாதன், பாடசாலை அதிபர் சூ.றோபேட் உதயகுமார், ஆசிரியர்கள் ஆகியோர் நிற்பதையும் விரிவுரையாளர் க.இ.கமலநாதன் மரம் நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

# கடலில் காணாமல் போன இளைஞனின் சடலம் மீட்பு

(கொழும்பு)

திருக்கோவில் கடலில் நேற்று முன்தினம் காணாமல்போன இரு இளைஞர்களில் ஒருவரின் சடலத்தை பொலிஸார் நேற்றுக்காலை மீட்டுள்ளனர். பதுளையைச் சேர்ந்த விஜயகுமார் செல்வகுமார் வயது 20 என்ற இளைஞனின் சடலத்தையே நேற்றுக்காலை 9 மணியளவில் திருக்கோவில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குளிக்கச் சென்ற இடத்தில் இருந்து ஒரு மயிலுக்குப் அப்பால் மேற்படி இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் தற்போது இவ் இளைஞனின் சடலம் திருக்கோவில் பொதுவைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திருகோவில் கடலுக்குச் குளிக்கச் சென்ற இரு இளைஞர்கள் காணாமல் போனதுடன் அவர்களில் ஒருவரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மற்றைய இளைஞனின் சடலத்தை தேடும் பணியில் பொலிஸாரும் பொதுமக்களும் ஈடுபட்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# கிராம அலுவலர் முதல் பல்வேறு தரப்பினரும் அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்படுகின்றனர்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் அதிகளவு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும் கடந்த ஜனாதிபதித்தேர்தலின் பின்னர் கிராம உத்தியோகத்தர் முதல் பல்வேறு மட்டத்தினரும் அரசியல் ரீதியாக பழிவாங்கப்படுவதாகவும் ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டிமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரசின் இத்தகைய நடவடிக்கைகளினால் நாட்டில் 9ஆயிரம் சிறைக்கைதிகள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா 35 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் தமக்கு எதிராக செயற்பட்டவர்கள் யார் எனத் தெரியும் என குறிப்பிட்டாரே தவிர அவர்களிடம் பழிவாங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு வேண்டியவர்களே ஆணைக்குழுக்களின் அங்கம் வகிப்பதாகவும் கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக்கட்சி தவறு இழைத்திருந்தால் அதற்காக மன்னிப்புக்கோருவதாகவும் தாம் எதிர்காலம் பற்றியே பேசுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியில் அங்கம் வகித்த போது அப்துல் காதருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதாகவும் தற்போது அவர் அரசாங்கத்துடன் இணைந்த பின்னர் அந்த வழக்கில் இருந்து அவருக்கு விடுதலை அளிக்கப்பட்டுள்ளதாகவும் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பேருந்து கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அடுத்த ஆண்டு யூலை மாதம் தொடக்கம் பேருந்துக் கட்டணத் தை அதிக சதவீதத்தால் உயர்த்த வேண்டும் என ஐக்கிய இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கோரியுள்ளது.

சங்கத்தின் பிரதான செயலாளர் அஞ்சன ப்ரியஞ்ஜித் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அத்துடன் இந்தமுறை வரவு-செலவுத்திட்டத்தில் தனியார் போக்குவரத்துத் துறைக்கு எதுவித நிவாரணங்களும் அறிவிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அரசாங்க தாதிமார் சங்கத்தினால் பணிப்பகிஷ்கரிப்பும் சத்தியாக்கிரகமும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க தாதிமார் சங்கம் கடந்த ஆண்டு மார்கழி மாதம் தொடக்கம் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் தொடர் போராட்டங்களை நடாத்தி வருகிறது.

இதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இன்று வியாழக்கிழமை காலை 11.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை சகல வைத்தியசாலைகளிலும் ஒரு மணி நேர பணிப் பகிஷ்கரிப்பும் சத்தியாக்கிரகமும் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப் போராட்டத்தின் சகல தாதிய உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலை அரசாங்க தாதிமார் சங்கச் செயலாளர் பி.பி. சிவயோகம் அறிவித்துள்ளார்.

# 2010.12 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- *1755* - ஐக்கிய இராச்சியத்தின் இரண்டாவது எடிஸ்டோன் கலங்கரை விளக்கம் தீ விபத்தில் அழிந்தது.
- *1804* - பாரிசில் நெப்போலியன் பொனபார்ட் பிரான்சின் பேரரசனாக முடிசூடினான்.
- *1805* - நெப்போலியனின் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் ஒஸ்டர்லிட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ரஷ்ய-ஆஸ்திரியக் கூட்டுப் படைகளைத் தோற்கடித்தன.
- *1843* - யாழ்ப்பாணத்தில் கடும் சூறாவளி வீசியதில் பலத்த அழிவுகள் ஏற்பட்டன.
- *1848* - முதலாம் பிரான்ஸ் ஜோசப் என்பவன் ஆஸ்திரியாவின் பேரரசன் ஆனான்.
- *1851* - புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரெஞ்சு தலைவன் சார்ள்ஸ் லூயி பொனபார்ட் இரண்டாம் குடியரசைக் கலைத்தான்.
- *1852* - மூன்றாம் நெப்போலியன் பிரான்சின் பேரரசன் ஆனான்.
- *1908* - பூ யி தனது இரண்டாவது அகவையில் சீனாவின் பேரரசனாக முடிசூடினான்.
- *1942* - மன்காட்டன் திட்டம்: என்றிக்கோ பெர்மி தலைமையிலான குழு செயற்கையாகத் தானே தொடருமாறு நிகழும் அணுக்கரு தொடர்வினையை ஆரம்பித்தது.
- *1946* - பிரித்தானிய அரசாங்கம் நேரு, பால்தேவ் சிங், ஜின்னா மற்றும் லியாகத் அலி கான் ஆகிய தலைவர்களை இந்தியாவின் சட்ட சபையைப் பிரதிநிதித்துவப்படுத்த அழைத்தது.
- *1947* - பாலஸ்தீன நாட்டைப் பிரிக்க ஐ.நா. சபை எடுத்த முடிவை அடுத்து ஜெருசலேமில் கலவரம் வெடித்தது.
- *1954* - சீனாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் வோஷிங்டன் டிசியில் கைச்சாத்திடப்பட்டது.
- *1956* - பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா மற்றும் ஆதரவாளர்களும் கியூபா புரட்சியை முன்னெடுப்பதற்காக கிரான்மா என்ற படகில் கியூபர்வை சென்றடைந்தனர்.
- *1961* - பிடெல் காஸ்ட்ரோ தன்னை ஒரு மார்க்சிச-லெனினிசவாதி எனவும் கியூபா கம்யூனிசநாடாக இருக்கும் எனவும் அறிவித்தார்.
- *1971* - அபுதாபி , புஜெய்ரா, ஷார்ஜா, டுபாய் மற்றும் உம்அல்குவைன் ஆகியன இணைக்கப்பட்டு ஐக்கிய அரபு அமீரகம் என்ற ஒரே நாடாக ஆக்கப்பட்டது.
- *1971* - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் விடுதலை பெற்றது.
- *1975* - பத்தே லாவோ என்பவர் லாவோசின் ஆட்சியைப் பிடித்து லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைத்தார்.
- *1976* - பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் அரசுத் தலைவரானார்.
- *1980* - எல் சல்வடோரில் நான்கு ஐக்கிய அமெரிக்க கன்னியாஸ்திரிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.
- *1988* - பெனாசீர் பூட்டோ பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமரானார்.
- *1990* - ஒன்றுபட்ட ஜெர்மனியில் 1932 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் அதன் வேந்தர் ஹெல்முட் கோல் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது.
- *1993* - ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியைத் திருத்தும் நோக்கோடு நாசாவின் எண்டெவர் விண்ணோடம் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- *2002* - இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவில் ஆரம்பமாயின.
- *2005* - போதைப்பொருள் கடத்தல் குற்றத்துக்காக அவுஸ்திரேலியரான வான் துவோங் நியூவென் சிங்கப்பூரில் தூக்கிலிடப்பட்டார்.
- *2006* - பரிதிமாற் கலைஞரின் நூல்கள் தமிழக அரசினால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன.
- *2006* - பீகார் மாநிலத்தின் பகல்பூரில் பாலம் இடிந்து வீழ்ந்ததில் அதன் வழியாகச் சென்ற கடுகதித் தொடருந்து வண்டி விபத்துக் குள்ளாகியதில் 35 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- *1910* - ரா.வெங்கட்ராமன், இந்தியாவின் 8ஆவது ஜனாதிபதி.
- *1933* - கி.வீரமணி, திராவிடர் கழகத் தலைவர்.
- *1973* - மோனிகா செலஸ், டென்னிஸ் வீராங்கனை.
- *1973* - யான் உல்ரிச், செருமானிய மிதிவண்டி வீரர்.
- *1979* - அப்துல் ரசாக், பாக்கிஸ்தான் முன்னாள் துடுப்பாட்ட வீரர்.
- *1981* - பிரிட்னி ஸ்பியர்ஸ், பொப் இசைப் பாடகர் (பாடகி)
- *1982* - முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத்தமிழன் (இ. 2009)

### இறப்புகள்

- *1547* - எர்னான் கோட்டெஸ், நாடுபிடிப்பாளர் (பி. 1485)
- *1552* - புனித பிரான்சிஸ் சேவியர் , ரோமன் கத்தோலிக்க மிசனறி (பி1506)
- *1911* - பாண்டித்துரைத் தேவர், தமிழறிஞர் (பி. 1867)
- *1933* - ஜி.கிட்டப்பா, நாடக நடிகர்
- *2006* - வீ.துருவசங்கரி, இலங்கையின் அறிவியலாளர் . (பி. 1950)
- *2008* - மு.கு.ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர். (பி. 1933)

***1995 - யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சி அடைந்தது.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - தமிழ் இலக்கிய நயம்

## பகுதி - I 3 மணித்தியாலங்கள்

பகுதி I இல் 1, 2 ஆகிய இரு வினாக்களுக்கும், பகுதி II இல் 3ஆம் வினாவுக்கும், பகுதி III இல் 4, 5, 6 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் விடை எழுதுக.

### பகுதி - I

01) (I) தொடக்கம் (X) வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

I) இந்த உலகத்தில் மக்கள் சமுதாயமாக கூடிவாழ்வதற்கு தேவையானவை என "நம்பிக்கை" என்ற கட்டுரையின் ஆசிரியர் வலியுறுத்தியுள்ள பண்புகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

II) "ரொம்பநாளா ஓர் ஆசை, இப்பதான் வாங்க முடிஞ்சது வாங்கிப் போட்டேன்" இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

III) "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்பதன் மூலம் பாரதியார் வேண்டுவது என்ன?

IV) "தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்" என்ற அடிமூலம் பாரதிதாசனின் மொழிப்பற்று எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

V) தலாட்டுப்பாடலில் குழந்தையை "ஆண் பனையின் நுங்கே! அணில் கோதா மாம்பழமே!" எனக்குறிப்பதிலுள்ள பொருத்தப்பாட்டினை விளக்குக?

VI) பறாளை விநாயகர் பள்ளு என்ற நூலில் இடம் பெறும் மஞ்சளாவிய மாடங்கடோறும்.... என்ற செய்யுளில் ஈழ மண்டலத்தின் இயற்கை வளம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?

VII) "ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல்" இக் குறட்பாவின் கருத்தினை உமது மொழி நடையில் எழுதுக?

VIII) உமது கருத்துப்படி நாவலர் என்ற பட்டம் பொதுவாக யாருக்கு வழங்கப்படலாம்?
இலங்கையில் நாவலர் எனப் பலராலும் அழைக்கப்படும் இருவரும் யாவர்?

IX) அ) நந்திவர்மனின் மறைவோடு அவனுக்கே உரித்தான எத்தகைய பண்புகள் எல்லாம் மறைந்து விட்டதென புலவர் குறிப்பிடுகின்றார்?
ஆ) புலவருடைய கையறுநிலையைக் குறிப்பாக உணர்த்தும் பாடலடியை விளக்குக?

X) "அப்படியா சேதி! வா இப்படி இரி!" என்று கொண்டே வெற்றிலையைத் தட்டத் தொடங்கினாள் கிழவி. "இப்பம் எதுக்கு இங்கே வந்தே?" இங்கு நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாற்றை விளக்குக?

(2 x 10 = 20 புள்ளிகள்)

02). பின்வரும் செய்யுள்களினதும் உரைப்பகுதியினதும் பொருளை உங்கள் மொழி நடையில் எழுதி, தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்குக.

1) வந்து முனி எய்துதலும் மார்பில் அணி ஆரம்
அந்தரதலத்து இரவி அஞ்ச, ஒளிவிஞ்ச
கந்த மலரில் கடவுள் தன் வரவு காணும்
இந்திரன் என, கடிது எழுந்து அடி பணிந்தான்.

2) காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ - நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோஉரை?

3) வாரிக் களத்தடிக்கும் வந்து பின்பு கோட்டை புகும்
போரிற் சிறந்த பொலிவாகும் - சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

4) நாட்டுப்பாடல்களின் நயமான இசை, எமது ஏட்டிலக்கியத்தில் இயற்றமிழ் செய் யுள்களைப் படிப்படியாக இழைவும், குழைவும் உடையனவாக்கியுள்ளன. இயற்றமிழ்ச் செய்யுள் வரலாற்றை நோக்கினால், சங்ககால முதல் இன்று வரையும் இச் செய்யுள்கள் இசையை மென்மேலும் கூடுதலாக ஏற்று இனிமை பெற்றுள்ளதைக் காணலாம். இயற்றமிழ் கவிதைகள் படிப்படியாக இசை தழுவிய பாடல்களாக மாறியமைக்கு நாட்டுப் பாடல்களின் நெஞ்சையள்ளும் இசையே காரணமாகும்.

5) ஆகவே பேச்சு என்பது மக்களது அரிய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்த செல்வமாகும் என்று நாம் எளிதில் துணியலாம். அன்றியும் அது மக்களினத்திற்கு மட்டுமே ஏகவுரிமையாக உள்ளதென்பதும் நாம் நன்கு உணரலாம். விலை மதிக்க முடியாத இப்பரம்பரை உரிமைதான் நம் மக்களினத் தவர்க்குச் சிருஷ்டிகளில் தலைமைப் பதவியை அளித்திருக்கின்றது.

### பகுதி II

பாடற்பகுதிக்கு அல்லது உரைப்பகுதிக்கு விடை எழுதுக.

03) தரப்பட்டுள்ள பாடற் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்
தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்
அந்தமி லெம்மொழி மாதா - படும்
அல்லலைத் தீர்க்க அறிவுவ ராதா

முச்சங்கத் தரியணை யேறி - மன்னர்
முடிதொட்டு மூவரும் அடிதொட்டுப் போற்ற
விச்சையா லரசாண்ட மாதா - அவள்
வேதனை தீர்க்க விரக்கம்வ ராதா

இன்னமு தோ தெளி தேனோ - என
எஞ்செவிக் கினிக்கின்ற மொழியெது தானோ
அன்னை மொழிதனை நாமோ - வெறுத்
தருவருத் தவமதித் திடலழ காமோ

வேற்று மொழிகளைக் கற்றோம் - எங்கள்
மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம்
ஆற்றிலே புளிகரைத் திட்டோம் - ஐயோ
அருமந்த தமிழினை யறியாது கெட்டோம்

1) இப்பாடல்களைக் கவிஞர் எழுதியதன் நோக்கம் யாது?
2) இப்பாடல்களில் தமிழ்மொழியின் தொன்மை, இனிமை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
3) பின்வரும் அணிகளை விளக்குக?
அ) தெய்வத் தமிழ் ஆ) மொழிமாதா
4) மெய்யான முதுசொத்தை விலைபேசி விற்றோம் ஆற்றிலே புளிகரைத் திட்டோம் - என்ற அடிகள் மூலம் புலப்படுத்தப்படுவது யாது?
5) இப்பாடல்களினூடாகக் கவிஞரது மொழிப்பற்று வெளிப்படுத்தப் படுமாற்றினை விளக்குக?

**அல்லது**

கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

யூலிய சீசர் உரோமாபுரிக்கு அரசன் ; மகா பராக்கிரமசாலி ; கருமங்களை எண்ணியே துணிவான் ; துணிந்த பிறகு, துருவ நட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றுந் தான் அசையான் ; உயிரிழக்க நேர்ந்தாலும் அச்சம் என்றொரு பண்டம் அவனுக்குத் தெரியாது.

வீரன் ஒரு தரம் இறக்கிறான் ; பயங்காளி நூறுமுறை சாகிறான் ; என்று சொல்லிச் சீசர் சிரிப்பான்.

புரூட்டஸ் சீசரின் நண்பன் ; பெரிய நீதிவான் நல்லவன் ; பரோபகாரி அவனிடத்திலே ஒரு சிறு குறை ; எளிதில் ஏமாந்து போகக்கூடியவன்.

கஷியஸ் பொல்லாத சகுனி

கஷியஸும் அவன் கூட்டத்தாரும் புரூட்டஸை ஏமாற்றுகின்றார்கள். சீசரைக் கொல்வது புண்ணியம் என்று போதிக்கப்படுகின்றது. புரூட்டஸ் அந்தப் போதனையை அப்படியே நம்புகிறான் ; ஒரு 'கோட்சே'யாக மாறுகிறான்.

பங்குனி மாசத்திலே பட்டப்பகலிலே சீசரின் அந்தாணி மண்டபத்திலே, கஷியஸ், அவனைச் சேர்ந்த சர்ப்பங்கள், நல்ல மனிதனான புரூட்டஸ் குழுமி இருக்கிறார்கள்.

சீசர், எதிர்த்த தடைகளையெல்லாம் உதறித் தள்ளிக்கொண்டு,
அந்தப்புரத்திலிருந்து அந்தாணி மண்டபத்தை நோக்கி,
"மாக மடங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தான்"

1) இவ்வுரைப் பகுதியில் புலப்படுத்தப்படும் யூலியசீசரின் குணநலன்கள் பற்றிய உமது மனப்பதிவைத் தருக?
2) புரூட்டஸின் பலவீனம் யாது? அது எவ்வாறு பலப்படுத்தப்படுகின்றது?
3) பின்வரும் தொடர்களை விளக்குக?
அ) துருவ நட்சத்திரம் அசைந்தாலும் அத்துணிபினின்றும் தான் அசையான்
ஆ) கஷியஸ் பொல்லாத சகுனி
இ) புரூட்டஸ் ஒரு கோட்சேயாக மாறுகிறான்
4) அ) "மாக மடங்கலும் ... நாண நடந்தான்" இப்பாடலடி எந்த இலக்கியத்தில் இடம் பெறுகின்றது?
ஆ) இப்பாடலடியைக் கட்டுரை ஆசிரியர் இங்கு பயன்படுத்தும் சந்தர்ப்பம் யாது?
5) பொருள் கூறுக.
பயங்கானி, பரோபகாரி, அந்தாணி மண்டபம், சர்ப்பம்

(5 x 5 = 25 புள்ளிகள்)

### பகுதி III

எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக.

04) "நீருழவன்" என்ற கவிதையில் மீனவரின் உழைப்பு, துன்பம் சமூகச் சுரண்டல் என்பவை எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பாங்கினை விளக்குக?

05) "நாட்டார் பாடல்கள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், என்னும் மூன்றையும் வளமுறச் செய்தவை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை உதாரணங்கள் மூலம் விளக்குக?

06) "நாவலர் இருவர்" என்ற கட்டுரையில் ஆறுமுகநாவலரும் விபுலானந்தரும் ஒப்புநோக்கப்படுகின்ற திறனைச் சுருக்கமாக விளக்குக?

07) "மழைக்கை" என்ற நாடகத்தில் "இரப்போர்க்கு என்றும் ஈயும் ஓர் தூய உள்ளம்" கொண்டவனாகக் கர்ணன் சித்தரிக்கப்படுகின்றான். இப் பொருத்தப்பாட்டினை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக? (15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளையின் சேவை நலன் பாராட்டு விழாவும் புதிய அதிபர் வ.ஸ்ரீகாந்தனை வரவேற்கும் விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிபர்கள் வரவேற்கப்படுவதையும் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளைக்கு பழைய மாணவர் டாக்டர் செ.கண்ணதாசன் வாழ்த்துப்பா வழங்குவதையும் புதிய அதிபர் வ.ஸ்ரீகாந்தனுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# பரிசளிப்பு விழா

(அல்வாய்)

யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் க.க.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாடசாலையின்பழைய மாணவரும் இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவன நிர்வாக இயக்குநரும் முன்னாள் கல்வி அமைச்சின் கணக்காளருமான ராஜ் சுப்பிரமணியம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

பரிசில்களை திருமதி உருத்திரேஸ்வரி ராஜ்சுப்பிரமணியம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-19)

✠✠✠

(அல்வாய்)

வல்வெட்டித்துறை அ.மி.த.க.கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் மாலை 2மணிக்கு கல்லூரி அதிபர் பூ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

மேலும் சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் பொன்.தெய்வேந்திரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-19)

✠✠✠

(அல்வாய்)

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஸ்ரீ-19)

# இலவச பாடநூல்களை பேணிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள்

(அல்வாய்)

நாடளாவிய ரீதியில் 2010 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கிய இலவச பாடநூல்களை நன்கு பேணிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 8ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை உள்ள வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்களின் இலவச பாடநூல்களை பாடசாலை நிர்வாகக்குழு தேர்ந்தெடுத்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ.எம். என்.ஜெ. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட வேண்டிய சான்றிதழ்களை சகல கல்வி கோட்டங்களுக்கும் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அதிபர் அல்லது பொறுப்பான ஆசிரியர் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

# பணப் பையைத் திருடியோர் எச்சரிக்கையின் பின் விடுவிப்பு

(நவாலி)

நவாலிப் பகுதியிலுள்ள கடை ஒன்றுக்கு சென்ற மாணவர்கள் 6பேர் கொண்ட குழு நேற்று முன்தினம் கடையில் வந்து பொருட்களின் விலையை விசாரித்து விட்டு மேசையில் இருந்த பணப்பையினை எடுத்துச் சென்றுள்ளனர்.

சிறிது நேரத்தில் கடை உரிமையாளர் மேசையில் இருந்த பணப்பையை காணவில்லை என்று தேடி துரத்திச் சென்று அவர்களை மடக்கிப்பிடித்து விசாரித்த வேளையில் அவர்களின் புத்தகப் பையில் இருந்து பணப்பை கண்டெடுக்கப்பட்டது.

அக்குழுவில் ஒரு மாணவனை விசாரிக்கும் போது மிகுதி மாணவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

மேற்படி மாணவன் நவாலி இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உதவியுடன் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மாணவனின் எதிர்காலத்தை கருத்திற் கொண்ட கடை உரிமையாளரும் நவாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியும் கேட்டுக் கொண்டதற்கிணங்க சட்ட நடவடிக்கை எடுக்காமல் 6பேரின் பெற்றோரையும் வரவழைத்து எச்சரிக்கை செய்த பின் பொலிஸார் விடுவித்தனர். (ஸ்ரீ-26)

# வருடாந்த கலைவிழா

பாலர் கல்விக் கழகத்தின் 14 ஞானக் குழந்தை இல்லங்கள் இணைந்து நடாத்தும் 45 ஆவது வருடாந்த கலைவிழா நாளை வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கழகத் தலைவரும், சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியருமான சித்தாந்த பண்டிதர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் நடராஜா சுகிர்தராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனத்தின் மாதாந்த ஆய்வரங்கம் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை பத்து மணிக்கு இல.60, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள சொண்ட் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆய்வரங்கில் " குடாநாட்டில் புதிய தொழில்வாய்ப்புகள்" எனும் தலைப்பில் பேராசிரியர் பசுபதி-சிவநாதன் ஆய்வுரை ஒன்றை நடாத்தவுள்ளார். (ஸ்ரீ)

# கலை நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்ற பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வை நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-35)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லி புர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் மகாபாரதம் தொடர் சொற்பொழிவை யாழ் புதிய உயர்கல்வி விரிவுரையாளர் பொன். சுகந்தன் வழங்கவுள்ளார். (ஸ்ரீ-35)

# வலய மட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப்போட்டி மற்றும் வாய்ப்பாடு மனனப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**திருக்குறள் மனனப் போட்டி**

இ.யசோதா (யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை), கு.அன்சின்சியா (யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை), மூன்றாம் இடம் இருவர் ஜெ.கஜீபன்(யா/கரணவாய் பொன்னம்பல வித்தி.), இ.சாய் சந்தோஸ் (யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தி.),

மு.சந்தோஸ் (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தி.), தி.ஜனார்த்தனன் (யா/ தம்பசிட்டி மெ.மி.த.க.பா.), செ.சுகன்யா(யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா.)

ம.அபிநயா( யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), ஜெ.சர்மினி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), ஜெ.சயானந் (யா/ தம்பசிட்டி மெ.மி.த.க.பா),

செ.தாசிகா, ஜே. சாம்பவி(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி), செ.ஹம்சாயினி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி)

பா.பானுஜா( யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.), ஜெ.ஜதுசனா (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வித்தி.), மூன்றாமிடம் இருவர் ப.கோபிகா(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), ஈ.தனுசாளினி (யா/தும்பளை சிவப் பிரகாச ம.வித்தி

**வாய்ப்பாட்டு மனனப் போட்டி**

சூ.வக்சலா(யா/ பருத். சித்தி விநாயகர் வித்தி.), பு.அபிநயா (யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.) மூன்றாமிடம் இருவர் இ. துளசிகா,சு.அபிநயா (யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.)

ம.கோபிகா, ம.துஷாந் (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.), மூன்றாமிடம் இருவர் ர.ஹம்சிகா (யா/மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி.), லோ.நிருக்ஷிகா(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.

ந.விதுஷன் (யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.), சி.துவாரகன் (யா/தும்பளை சிவப்பிரகாச வித்தி), ப.கிஷானி (யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.)

(ஸ்ரீ-19)




# சந்தியில் குப்பை கொட்டப்படுவதால் பயணிப்போர் பெரும் அசௌகரியம்

(நவாலி)

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியையும் கல்லுண்டாய் வீதியையும் இணைக்கும் சந்தியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் அவ்விடத்தில் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் அயலில் உள்ள வயல்களுக்கு இக்குப்பைகள் காற்றில் எடுத்துச் செல்லப்படுவதால் வயல் உரிமையாளர்கள் கூலி ஆட்களைக் கொண்டு துப்பரவு செய்ய வேண்டிய நிலை உள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் அமைச்சர்கள் செயற்பட வேண்டும்

## மேர்வின் சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

அமைச்சர்கள் அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டுமென மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவாதங்கள் நடைபெறும் போது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பாராளுமன்றில் பிரசன்னமாகியிருக்க வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகா அரசியல் கைதியல்ல; நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை அரசியல் கைதியாக கருத முடியாதென அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டனைக்கு அமைய சரத்பொன்சேகா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துவதனைப் போன்று சரத் பொன்சேகா ஓர் அரசியல் கைதி கிடையாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர் ஓர் அரசியல் கைதி என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்திற்கு பதிலளித்த போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் அரசியல் கைதிகள் கிடையாது எனவும் இந்த முன்னுதாரணத்தை இலங்கையும் கடைபிடிக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# இடைக்கால பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட இடைக்கால பிரதிநிதிகள் குழு தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரவையால் அமைக்கப்பட்டுள்ள இந்தக்குழுவிற்கு சட்டமா அதிபர் முகான்பீரிஸ் தலைமை வகிக்கிறார்.

கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதி இந்த உப குழு தமது முதலாவது அமர்வை நடத்தியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த அமர்வின் போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைகளை ஆராய்ந்ததன் பின்னர் அது தொடர்பில் அரச அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு தெரிவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த உபகுழுவானது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு சமாந்தரமாக செயற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இரண்டரைக் கோடி ரூபாய் பெறுமதியான 57 ஆயிரம் கிலோ கஞ்சாசெடி அழிப்பு

(கொழும்பு)

கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது வெல்லவாய பிரதேசத்தில் 8 ஏக்கர் கஞ்சா சேனை ஒன்றினை முற்றுகையிட்டு இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இரண்டரைக்கோடி ரூபாய் பெறுமதியுள்ள 57 ஆயிரம் கிலோ கஞ்சாவை தீயிட்டு அழித்துள்ளனர்.

இதுவரையில் ஒரே நேரத்தில் இலங்கையில் அழிக்கப்பட்ட மிகப் பெரிய தொகை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸார் ஒருவாரத்திற்கு முன் 2500 மில்லிக்கிராம் கஞ்சாவுடன் கைதுசெய்த நபர் ஒருவரிடம் பெற்ற தகவலின் பிரகாரம் மற்றும் நான்கு பேரை கைது செய்து அவர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு கிடைத்த தகவலின் பிரகாரம் மற்றும் வெல்லவாயப் பிரதேசத்திற்கு சென்று இந்த கஞ்சாத் தொகையினை அழித்துள்ளனர்.

வெல்லவாயவில் மிகவும் கஷ்டப் பிரதேசமான ஒரு காட்டுப்பகுதியில் இக் கஞ்சா சேனை நடாத்தப்பட்டதாகவும் 3 தினங்கள் இரவு பகலாக விழித்திருந்து நேற்று அதிகாலை வரையும் கஞ்சா சேனையை அளிக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன , பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த கம்மன்பில ஆகியோரின் மேற்பார்வையிலே பொலிஸ் அத்தியசட்கர் உபாலி ஜெயசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவொன்று இந்நடவடிக்கையில் ஈடுபட்டது என தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# ஓமந்தை தடுப்பு முகாமிலிருந்த புலி உறுப்பினர் தப்பியோட்டம்

## பொலிஸார் தெரிவிப்பு

வவுனியா ஓமந்தை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் அங்கிருந்து நேற்று முன்தினம் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த இராஜதுரை சசிந்திரன் எனப்படும் ஒடிணா என்பவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குறித்த தடுப்பு முகாமிற்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச் சென்றவரை தேடும் பணி கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வன்னியில் இடம்பெற்ற போரின் போது குறித்த நபரை படையினர் கைதுசெய்ததாக தெரிவிக்கப்படுகிறது. 700 விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஓமந்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தமிழ்ச்செல்வன் பயன்படுத்திய லப்டொப் கணனி மீட்பு

## லக்பிம தகவல்

(கொழும்பு)

விமானப்படையினரின் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி பலியான தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பயன்படுத்திய மடிக்கணனி மீட்டெடுக்கப்பட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் குறித்த லப்டொப் கணனியுடன் பெருந்தொகைப் பணமும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கணனியில் அரசியல் பணிமனையில் காணப்பட்ட இரகசியத் தகவல்கள் காணப்படுவதாகவும் குறித்த லப்டொப் கணனியும் பணமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளமுள்ளி வாய்க்கால் பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளன.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் குறித்த பொருட்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


அன்றாட தேவைக்கான அனைத்துப் பொருட்களையும்
இலகுவாகக் கொள்வனவு செய்திட நாடுங்கள்
யாழ். நகரின் மத்தியில்

"ராம் சுப்ப சிற்றி"



இரண்டாம் ஆண்டில் காலடி வைப்பதை முன்னிட்டு ஒருவார காலத்திற்கு 4000/= க்கு மேற்பட்ட தொகைக்குப் பொருட்களை கொள்வனவு செய்யும் அதிர்ஷ்டசாலிகளுக்கு கவர்ச்சிகரமான பரிசுகள் காத்திருக்கின்றன.

1. CD - Player
2. Phone
3. Iron Box
4. Watch
5. 10 ஆறுதல் பரிசுகள்

இவ்வார காலப் பகுதியில் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருட்களுக்கும் 5 வீத விலைக்கழிவு

இவ் அரிய வாய்ப்பு 01.12.2010 தொடக்கம் 08.12.2010 வரையாகும்.

முந்துங்கள் உங்கள் பரிசுக்கு.

- சிறந்த பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள்
- ஐஸ்கிறீம் வகைகள்
- குளிர்பானங்கள்
- பழரசங்கள்
- பழ வகைகள்
- இறைச்சி வகைகள்
- சொசேச் வகைகள் [Keells]
- பால்மா வகைகள்
- பிளாஸ்ரிக் கதிரை வகைகள் [Nilkamal
- போன் வகைகள் [E-Tel]

தரமான சொக்லட் உட்பட வகை வகையான தரமான அனைத்துப் பொருட்களையும் பெற்றிட....

உங்கள் தினசரி தேவைக்கு விஜயம் செய்து பாருங்கள்

T.p. 0212221252
0212221262

Raam Super City,
306, Hospital Road, Jaffna.



செவிலித்தாயார் தேவை (பராமரிப்பாளர்)

எமது ஆச்சிரமத்தில் தங்கியிருந்து சிறுகுழந்தைகளை (02 மாதக்குழந்தைகள் தொடக்கம் 6 வயது குழந்தைகள் வரை) பராமரித்து வளர்க்கக்கூடிய சேவையுள்ளமும் கருணையும் நற்பண்பும் தேகஆரோக்கியமும் குடும்பப் பொறுப்புகள் குறைவாகவும் கொண்ட பெண்கள் தேவைப்படுகிறார்கள். வயது 40 தொடக்கம் 50 வரை இருப்பது விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்க்கலாம். விரும்புபவர்கள் ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்கு நேரில் 04.12.2010ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தி. [illegible]
தலைவர்
மகாதேவா ஆச்சிரமம், புதுமுறிப்பு, கிளிநொச்சி

தொ.பே:- 026 3267571
077 3868566


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆவது அரசியலமைப்பிற்கான திருத்தமும் இலங்கையின் எதிர்காலமும்

காலத்துக்குக் காலம் ஆட்சி அதிகாரம் அதிகரிக்கப்படுகின்றது. ஓரிடத்தில் அதிகாரம் குவிக்கப்படுகின்றது. யுத்த கீதம் தொடர்ந்து பாடப்படுகின்றது. யுத்த பின்னணி மேன்மேலும் வலுவூட்டப்படுகின்றது. யுத்தத்தின் வெற்றி முழு நாட்டிலும் அடக்கு முறையின் ஆயுதமாக வியாப்பித்துள்ளது.

இந்தப்பின்னணியிலேயே அரசியலமைப்பின் 18வது திருத்தத்தை நாம் நோக்க வேண்டும், மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கவும் சமாதானத்தை நிலை நாட்டவும் அதிகாரத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்நிலைமையில் மாற்றம் ஏற்படாவிட்டால், பயங்கரமான எதிர்காலமே உருவாகும்.

### அரசியல் கலந்துரையாடல்

1978இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு மூலம் பெற்ற சர்வாதிகார அதிகாரங்கள் 1980 யூலை வேலை நிறுத்தத்தை ஒடுக்குவதற்கு பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டன. ஏனைய அரசியற் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் மிக மோசமாக அடக்கியொடுக்கப்பட்டன. 1983 யூலை வன்முறைகள் மற்றும் யுத்தம் காரணமாக ஜனாதிபதி அதிகாரங்கள் மேலும் அதிகரித்தன. இக் கால கட்டத்தில் எமது சமூகத்தில் பல்வேறு துறைகளில் அரசியல் கலந்துரையாடல்கள் வளர்ச்சியடைந்தன. இரண்டாயிரமாம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு இவ்வளர்ச்சியின் ஓர் அங்கமே. முதிர்ச்சியடையாத அரசியல் நிலைமை காரணமாக இவ் அரசியலமைப்பு தோல்வி கண்டது. சமாதானத்திற்கான அரிய சந்தர்ப்பங்களை இழந்தோம். எதிர்பாராத வகையில் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் பதவியை இழந்தார்.

ஜனாதிபதியின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற பரந்துபட்ட கருத்தியலின் பெறுபேறாக அரசியலமைப்பிற்கான 17வது திருத்தம் அங்கீகரிக்கப்பட்டது. சகல அரசியற்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும், தொழிற் சங்கங்களும் இதற்கு ஒத்துழைத்தன. ஆனால், அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தில் நிலவிய குறைபாடுகள் காரணமாகவும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் காரணமாகவும் அரசியலமைப்பும் கீழ்மைப்படுத்தப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாமை மூலம் 17வது திருத்தம் முதலில் மீறப்பட்டது.

முன்னை நாள் ஜனாதிபதியின் அரசியல் தேவையின் நிமித்தம் தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. அதன் பின்னர் ஏனைய ஆணைக்குழுக்களின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், அரசியலமைப்புச் சபை அமைக்கப்பட வில்லை. அரசியலமைப்பின் பரிந்துரையின்றி, சில ஆணைக்குழுக்களுக்களுக்கு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தான் தோன்றித்தனமாக உறுப்பினர்களை நியமித்தார். சமூக அரசியல் வளர்ச்சி மழுங்கடிக்கப்பட்டு தனிநபர் வாதம் மேலோங்கியது. யுத்தமும் இதற்குப் பயன்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பிற்கான 13வது திருத்தமும், 17வது திருத்தமும் மீறப்பட்டு ஜன நாயக நடைமுறை பாரதூரமான அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் நடைமுறைப் படுத்துகையில், நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதே அரசியல் தேவையாக இருந்தது. அதற்கமைய பாராளுமன்றத்திற்குரிய கண்காணிப்பு அதிகாரம் அரசு இயந்திரம் பூராவும் செயற்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் செயற்படும் சுமார் 12 தெரிவுக்குழுக்கள் மூலமே இது ஆரம்பிக்கப்படுகிறது. இவற்றுள் ஒன்று பகிரங்கத் தொழில் முயற்சிகளுக்கான தெரிவுக்குழு இரண்டாவது பகிரங்கக் கணக்குகளுக்கான தெரிவுக்குழு ஆகும். அரச நிறுவனங்களில் ஊழல் மோசடிகளைத் தடுப்பது இக் குழுக்களின் நோக்கமாகும். தற்போது இக் குழுக்களின் அதிகாரம் முறியடிக்கப் பட்டுள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளையும், ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைகளையும் பொருட்படுத்தாத அரசாங்கத்தின் உருவாக்கம் அதிகாரப் பேராசையின் விளைவாகும். இது முடிவு அல்ல. முடிவு மற்றுமோர் யுத்தமாக இல்லாது விடின், சிக்கல்களும் தீராத பிரச்சினைகளும் நிறைந்த, நன்னெறிகளற்ற, மிக வறிய நாடாகவே எமது நாடு திகழும். இப் பயணத்தை துரிதப்படுத்துவதையே 18வது திருத்தம் அமுலாக்கும் சகல அரச அதிகாரங்களையும் ஜனாதிபதி தம் வசமாக்குவதே இதன் அர்த்தமாகும். அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தின் மூலம் 17வது திருத்தம் இல்லாதொழிக்கப்பட்டு விட்டது. இது எவ்வாறு நடந்தேறியது என ஆராய்வோம்.

### 17ஆவதுடன் 18ஆவது திருத்தம்

ஜனாதிபதியின் அதிகாரங்களை அத்துமீறிப் பயன்படுத்த முடியாத வகையில் அரச இயந்திரத்தை ஜனநாயக மயப்படுத்தல் 17வது திருத்தத்தின் நோக்கமாக அமைந்தது. இதற்கு முதலில் 10 பேரைக் கொண்ட அரசியலமைப்புப் பேரவை உருவாக்கப்பட வேண்டும். இப் பத்துப் பேரில் ஐவர் இல ங்கையின் அரசியற் கட்சிகளைச் சாராத அறிஞர்கள். சிறிய கட்சிகளின் பிரதிநிதி, ஜனாதிபதியின் பிரதிநிதி, பிரதமரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி, சபாநாயகரின் பிரதிநிதி என்போரே ஏனைய ஐவராவர். இந்த அரசியலமைப்புப் பேரவையே ஏனைய 7 ஆணைக்குழுக்களினது உறுப்பினர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்யும். இங்கு ஜனாதிபதியின் அதிகாரம் பின்வருமாறு மட்டுப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 41 இ (1)-ஜனாதிபதியால் அரசியலமைப்புப் பேரவைக்குச் செய்யும் விதப்புரைக்கு அமைய, பேரவை அங்கீகரித்திருந்தால் ஒழிய, இவ்வரசியலமைப்பிற்கான திருத்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்படும் எப்பதவிக்கேனும் ஜனாதிபதி எவரையும் நியமிக்க முடியாது.

ஆணைக்குழுக்களுக்கான நியமனம் பின்வருமாறு:

உறுப்புரை 41 ஆ(1) "ஆளெவரும், பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி இவ் வுறுப்புரைக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்குள் எவற்றினதும் தவிசாளராக அல்லது உறுப்பினரொருவராக ஜனாதிபதியினால் நியமிக்கப் படுதலாகாது."

இதற்கமைய அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையொன்றின் மீதன்றி ஜனாதிபதி தன்னிச்சையாக நியமனம் செய்ய முடியாது. அரச உயர் பதவிகளுக்கு ஜனாதிபதி பரிந்துரை செய்தாலும் பேரவையின் அங்கீகாரமின்றி நியமனங்களைச் செய்ய முடியாது, என்பதே இவ்விரண்டு உறுப்புரைகளும் குறிப்பிடுகின்றன. அட்டவணைகளில் குறிப்பிடப்படும் ஏனைய பதவிகள் பின்வருமாறு உறுப்புரை (41)

#### அட்டவணை I

1. தேர்தல் ஆணைக்குழு
2. பகிரங்க சேவை ஆணைக்குழு
3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
4. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
5. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
6. நிதி ஆணைக்குழு
7. எல்லை வரையறை ஆணைக்குழு

#### அட்டவணை II

பாகம் I

1. பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளும்
2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதிபதிகளும்
3. நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் (பிரதம நீதியரசர்) தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்

பாகம் II

1. சட்டத்துறை தலைமையதிபதி
2. கணக்காய்வாளர் தலைமையதிபதி
3. பொலிஸ் மா அதிபர்
4. நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்)
5. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

மேற்கூறிய ஆணைக்குழு உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரை அல்லது அங்கீகாரம் இன்றி ஜனாதிபதி நியமிக்கலாகாது" என்ற சட்டத்தை நீக்கி இவர்கள் அனைவரையும் ஜனாதிபதி நியமிக்க முடியும் என்றே அரசியலமைப்பிற்கான 18வது திருத்தத்தின் மூலம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜனாதிபதியை ஓரளவு கட்டுப்படுத்தும் சட்டங்கள் நீக்கப்பட்டு ஜனாதிபதியிடம் மேன்மேலும் அதிகாரங்களைக் குவிக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

இது 18வது திருத்தத்தில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

உறுப்புரை 41(அ)(1) "... சொல்லப்பட்ட அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களுக்கும் பதவிகளுக்கும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்."

17வது திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்புப் பேரவையன் விதப்புரை அல்லது அங்கீகாரம் பெறவேண்டிய பதவிகள் அனைத்தையும் ஜனாதிபதி தான் விரும்பிய நபர்களைக் கொண்டு நியமிக்க முடியும். ஆனால் அவ்வாறு நியமனங்களைச் செய்கையில் பாராளுமன்றப் பேரவை எனப் புதிதாகக் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் விதப்புரைகளைப் பெற இயலும். முன்னர் இருந்த அரசியலமைப்புப் பேரவைக்கு இருந்த எந்த வொரு அதிகாரமும் பாராளுமன்றப் பேரவைக்குக் கிடையாது. இப்பேரவை உறுப்பினர்கள் ஒன்றுகூடி விதப்புரை செய்யமாட்டார்கள். தனித்தனியாகப் பேரவை உறுப்பினர்கள் விதப்புரை செய்வார்கள். நியமனங்கள் பற்றி எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. மேற்படி பாராளுமன்றப் பேரவை உறுப்பினர்கள் பின்வருமாறு.

அ) பிரதம அமைச்சர்

ஆ) சபாநாயகர்

இ) எதிர் கட்சித் தலைவர்

ஈ) பிரதம அமைச்சர் நியமிக்கும் பா.உ. ஒருவர்


உ) எதிர்கட்சித் தலைவர் நியமிக்கும் பா.உ. ஒருவர்

அரசியலமைப்புச் சபையின் அதிகாரங்கள் வெட்டப்பட்டு உள்ளடக்கம் குறைக்கப்பட்டு பாராளுமன்றப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. சிவில் சமூகத்திலிருந்து நியமனம் பெறும் ஐவர் நேரடியாகவே வெட்டப்பட்டுள்ளனர். அது மாத்திரமின்றி இப்பாராளுமன்றப் பேரவை அதிகாரம் குறைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். ஜனாதிபதி நியமனம் செய்யும் இயல்பை நோக்குகையில் பாராளுமன்றப் பேரவை ஒன்றையுமே செய்ய முடியாது.

பகிரங்க சேவை ஆணைக்குழு பற்றிய 55ஆவது உறுப்புரை நீக்கப்பட்டு புதிய 55ஆவது உறுப்புரையொன்று புகுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய அரச ஊழியர்களின் நியமனங்கள், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள், பதவி நீக்கம் என்பன பற்றிய கொள்கைகளை அமைச்சரவையே தீர்மானிக்கும். உறுப்புரை 55 (1)

எல்லாத் திணைக்களத் தலைவர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன அமைச்சரவைக்குரித்தாக்கப் படுதல் வேண்டும். உறுப்புரை 55 (2)

அரச ஊழியர்கள் தொடர்பான இக் கருமங்கள் அனைத்தும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பகிரங்க அரச சேவைகள் ஆணைக்குழுவையே சாரும். உறுப்புரை 55 (3)



18ஆவது திருத்தத்தின் மூலம் இரண்டு விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒன்று அரச இயந்திரத்தின் அனைத்து நியமனங்கள், இடமாற்றம், பதவி உயர்வு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் ஆகிய அனைத்தும் ஜனாதிபதி தன் வசப்படுத்திக் கொண்டுள்ளார்.

17ஆவது திருத்தத்தை நீக்குவது மூலம் இது இடம் பெற்றுள்ளது. இது நீக்கப்படுவதற்கு முன்னரே தான் தோன்றித்தனமான செயற்பாடே நடைமுறையில் இருந்தது. சட்டத்தில் ஊழல் மோசடி என்னும் தீய நடைமுறை 18ஆவது திருத்தம் மூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. தனது பதவிக் காலத்தை நீடிப்பதே இத்திருத்தத்தின் இரண்டாவது குறிக்கோளாகும்.

### பதவிக்காலம் பற்றிய கட்டுப்பாட்டை நீக்குதல்

ஒரே நபர் நீண்டகாலம் பதவி வகித்தால் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படும் என்பதே உலக அனுபவமாகும். எனவே, அதிகாரத்தில் இருக்கும் காலம் இரண்டு தடவைகளுக்கு மட்டுப்படுத்துவது ஜனாதிபதி ஆட்சி நிலவும் நாடுகளின் அரசியலமைப்பிற்கு உட்புகுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் நிலவுவதே உலக வழமையாகும். ஆறு ஆண்டுப் பதவிக்

**சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**

காலம் இரண்டு தடவைகள் அமுலில் உள்ள நாடுகள் உலகில் மிக மிக அபூர்வம். தற்போது ஆறு ஆண்டு ஆட்சிக் காலத்திற்கு எதுவிதக் கட்டுப்பாடும் கிடையாது.

இலங்கை அரசியலமைப்பில் முன்பு இருந்த மட்டுப்பாடுகள் பின்வருமாறு:

"ஜனாதிபதிப்பதவிக்கு மக்களால் இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளெவரும், அதன் பின்னர் அத்தகைய பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமையுடையவராகார்." உறுப்புரை 31 (2)

18ஆவது திருத்தத்தின் மூலம் இம் மட்டுப் பாடு பின்வருமாறு நீக்கப்பட்டுள்ளது:

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, அதன் 31ஆம் உறுப்புரையில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.


(1) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் அத்துடன்

இங்கு அதிகாரம் பெற்ற ஆளெவரும் சதாகாலம் பதவியில் இருக்க முடியாத வகை யில் சட்டத்தில் அமைந்த தடை நீக்கப்பட்டு விட்டது. அரச இயந்திரம் உரிய முறையில் செயற்படுவது அடுத்ததடையாகும். தேர்தல்களின்போது நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடைபெற்றால் அல் லது அரச ஊழியர்கள் பாரபட்சமின்றி கடமைகளைச் செய்தால், அதிகாரப் பேராசை பிடித்த அதிகாரம் படைத்த ஆளெவரும் தேர்தலில் வெற்றி பெற முடியாது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விதிப்பு மாற்றமும் பொருளாதார தாக்கங்களும்

## ஓர் ஆய்வு (03)



3.2 வரி விலக்கெல்லை

காலாண்டுக்கான தற்போதைய 7.5 மில்லியன் ரூபா வரி விலக்கெல்லை 25 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படும்.

3.3 வரி வீதங்கள்

தற்போதுள்ள வரி வீதங்கள் பின்வரும் நான்கு கட்ட வரிக் கட்டமைப்பொன்றுக்குள் இலகுபடுத்தப்படும்.

3.4 வரி விபரத் திரட்டுகள் சமர்ப்பிக் கப்படுதல்

| விற்பனை புரள்வின் வகை | வரிவீதம் |
|---|---|
| இலங்கை முதலீட்டுச் சபையின் முயற்சிகள் | 0.1% |
| விலக்களிக்கப்பட்ட /சலுகை வரிவீதங்களுக்கு உட்பட்டவை | 0.25% |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் - விளம்பர முகவர்கள் | 0.5% |
| ஏனையவை | 1.0% |

காலாண்டு அடிப்படையில் தற்போது பொருளாதார சேவைக் கட்டணத்திற்கான சமர்ப்பிக்கப்படும் வரி விபரத்திரட்டு அடிப் படையானது, காலாண்டுக் கொடுப்பனவு முறையுடன் வருடாந்த வரி விபரத் திரட்டு சமர்ப்பிக்கப்படும் நடைமுறையாக மாற்றப் படும்.

### 4.தேசக் கட்டுமான வரி

4.1 வரி வீதம்

தற்போதைய 3% தேசக் கட்டுமான வரி 2% ஆகக் குறைக்கப்படும்.

4.2 மொத்த, சில்லறை வியாபாரம்

பொருட்களின் மொத்த, சில்லறை வியா பாரம் தேசக் கட்டுமான வரியின் கீழ் உள்ள டக்கப்படும்.

4.3 வரி விலக்கெல்லை

தற்போதைய வரி விலக்கெல்லையான 650,000 ரூபா காலாண்டுக்கு 500,000 ரூபாவாகக் குறைக்கப்படும். எவ்வாறாயி னும் பின்வரும் நடவடிக்கைகளுக்கு காலாண் டுக்கான விலக்கெல்லை 12,500,000 ஆக அதிகரிக்கப்படும்.

- ஹோட்டல், விருந்தினர் விடுதி, உணவுச் சாலை அல்லது அதையொத்த, வர்த்தகம், விவசாய உற்பத்திகளுக்கான உள்ளூரில் கூட்டப்பட்ட பெறுமதிகள் மற்றும் அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்
- உள்ளூர் கல்வி நிறுவனங்கள்
- ஊழியர்களின் வழங்கல்கள் அல்லது வேலைவாய்ப்பு

4.4 வரிப் பொறுப்பிலிருந்து தவிர்க்கப்பட் டவை

(i) அரசால் நிதியிடப்பட்ட பாடசாலை கள் உட்பட அரசாங்க நிறுவனங் கள்.
(ii) வரையறுத்த ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் வரையறுத்த மிகின் லங்கா விமான சேவை.
(iii) சர்வதேச போக்குவரத்துத் தொடர் பில் துறைமுகம் அல்லது விமான சேவைகள்.
(iv) வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு இடம்பெறும் சர்வ தேசச் சந்தைக்கு கப்பல்களை நிர்மாணிப்பதற்கான சேவை வழங் குதல்.
(v) நிர்மாண ஒப்பந்தமொன்றின் உப ஒப்பந்தக்காரரின் சேவைகள்.
(vi) தொலைத் தொடர்புச் சேவைகள்.
(vii) உள்ளூரில் அபிவிருத்தி செய்யப் பட்ட கணனி மென்பொருள்.
(viii) உழவு இயந்திரங்களின் வழங்கல்கள்.

### 5.சுங்கத் தீர்வை

5.1 நான்கு கட்ட வரிக் கட்டமைப்பு

சுங்கத் தீர்வுக் கட்டமைப்பினை நான்கு கட்ட வரிக் கட்டமைப்புக்கு இலகுபடுத்தப்படும்.

மேலும் உள்நாட்டுப் பெறுமதி சேர்ப்பு டனான கைத் தொழில்கள் உயர் தொழில் நுட்பத்தினை ஊக்குவிப்பதற்கும் அவற்றின் உற்பத்திச் செயல்முறைகளை தரம் உயர்த் துவதற்கும் குறைந்த தீர்வை வீதத்தில் மூலப் பொருட்களையும் இயந்திரங்களையும் பெ ற்றுக் கொள்வதற்கும் அனுமதிப்பதன் மூலம் ஊக்குவிக்கப்படும்.

5.2 இறக்குமதித் தீர்வை மாற்றங்கள்

(i) தொலைத் தொடர்பு, தகவல் மற் றும் தொடர்பூட்டல், வெளிய கமூல வியாபாரத் துறைகள் ஆகியவற் றுடன் தொடர்புடைய பொருட் களுக்கு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும்.
(ii) புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் விவசாயத் துறையை மேம் படுத்துவதற்கும் அறுவடைக்குப் பின்னர் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து முறைக ளுடன் தொடர்புடைய பொருட்கள் சிலவற்றிற்கு விலக்களிப்பதுடன் ஏனையவற்றிற்கு சுங்கத் தீர்வை குறைக்கப்படும்.
(iii) பின்வரும் பொருட்களுக்கான சுங்கத் தீர்வை குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும்.

- வெதுப்பகத்தயாரிப்புக்கான உற்பத்திகள்
- சுற்றுலா மற்றும் நிர்மாணக் கைத்தொழில்
- உள்ளூரில் வாகனத் தயாரிப்புக்கான உதிரிப்பாகங்களின் இறக்குமதிகள்
- கல்வி, சுகாதாரம் மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி ஆகியவற்றிற்கான கருவிகள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி களுக்கு விலக்களிக்கப்படும். (தொடரும்)

பாலசுந்தரம் சிவாஜி
B.A.Hons (Econ),
M.A.(Econ),MBA (Finance),
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

# இந்து சமயத்துக்கு உதவவென தனியான அமைச்சர் தேவை

## விஜயகலா எம்.பி.வேண்டுகோள்



இந்துசமயத்துக்கென தனியான அமைச்சு ஒன்றுதேவை. இதன்மூலம் இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு உதவமுடியும என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். வரவு- செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறிய தாவது,

யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங் கள் முடிவடைந்துவிட்டபோதிலும் தமிழ் மக்கள் பூரணமாக இன்னமும் நிம்மதியாக வாழும் நிலை ஏற்படவில்லை. இந்த நிலை யிலேயே அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் யுத்தத் தினால் பெருமளவு ஆலயங்கள் அழிவ டைந்தும்,சேதமடைந்தும் உள்ளன. இவற்றைப் புனரமைப்பதற்கு எதுவித நடவடிக்கை களையும் அரசாங்கம் இதுவரை எடுக்க வில்லை.

யுத்தத்தினால் சகலவற்றையும் இழந்து அநாதரவான நிலையில் வாழும் மக்கள் தமது குடியிருப்புக்களைக் கூட அமைத்துக் கொள்ள முடியாத நிலையில் அல்லல்படுகின் றனர். இந்த நிலையில் ஆலயங்களைப் புனர மைப்பது என்பது முடியாத காரியமாகும்.

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் ஆலய வழிபாட்டுக்கு பிரசித்தி பெற்ற இடங்களாகும். பாடல் பெற்ற பல திருத்தலங்கள் இங்கு அமைந்துள்ளன. யுத்தத்தின் போது சேதம டைந்த, அழிவடைந்த அல்லது மூடப்பட்ட ஆலயங்களின் மூல விக்கிரகங்கள், ஆலய உபகரணங்கள் என்பன விற்பனை செய்யப் படுவதாக அண்மையில் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சிய மளித்த முன்னேஸ்வரம் ஆலயத்தின் குருக் களான பிரம்மஸ்ரீ எஸ்.பரமானந்தா சர்மா கவலை தெரிவித்திருந்தார்.

வடக்கு -கிழக்குப் பகுதிகளில் அரசாங்க நியமனங்கள் வழங்கப்படும் போது விகிதா சார முறைமை பேணப்பட வேண்டும். அண்மையில் வடக்கு கிழக்கில் வழங்கப்பட்ட அரசாங்க நியமனங்களின் போது விகிதா சார முறைமை பேணப்படவில்லை. வடக்கு கிழக்கில் மாகாணங்கள் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளாகும், எனவே இங்கு வேலைவாய்ப்பு அற்ற நிலையில் பெருமள வான இளைஞர், யுவதிகள் பரிதவித்து வரு கின்றனர்.எனவே, எத்தகைய நியமனங்கள் வழங்கப்படுகின்ற போதும் வடக்கு கிழக்கிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்பு வதற்கு விசேட திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.இதற்கென சர்வகட்சி குழுவொன் றினை அமைத்தால் அது பயனுள்ளதாக அமையும்.வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வரு கின்றமை தொடர்பில் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனாலும், அமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாராளுமன்றத் தில் ஆற்றிய உரை சற்று ஆறுதல் அளிப் பதாக உள்ளது. ஒரு சமூகத்தின் பிரதேசத்தை ஆக்கிரமிப்பதோ அல்லது இன ரீதியான பரம்பலைக் குறைப்பதோ அரசாங்கத்தின் திட்டமல்ல என அவர் தெரிவித்திருந்தார். அரசாங்கம் இத்தகைய நிலைப்பாட்டை தொடரு மானால் அது வரவேற்கத்தாகும்.

இந்து கலாசார அமைச்சு தனியாக வழங்கப்பட்டமையினால் இத்தகைய பணி களை எனது கணவரினால் செய்யக்கூடிய தாக இருந்தது.ஆனால் தற்போது மத விவ கார அமைச்சு ஒன்றாக இயங்குவத னால் இத்தகைய சேவைகள் செய்யமுடி யாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்துகலாசார அமைச்சு தனியாக இருந்தபோது பல ஆலயங்கள் புனர மைக்கப்பட்டன. செல்வச்சந்நிதி ஆலயத் திற்கு தேர் அமைக்கப்பட்டது. எனவே, இந்து சமயத்துக்கே தனியான அமைச்சு அமைக் கப்பட வேண்டும்.இதன்மூலமே இந்து சமய வளர்ச்சிக்கு உதவ முடியும்.இந்து கலாசார திணைக்களத்திற்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். அந்தத் திணைக் களத்தினரின் சேவைகள் பாராட்டத்தக்கன. அந்தத் திணைக்களம் உரியவகையில் செயற்படுவதற்கு கூடியளவான நிதி ஒதுக் கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கில் பெருமளவான இந்து ஆலயங்கள் பதிவு செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால், அரசாங்கம் வழங்குகின்ற சிறு உதவிகளைக் கூட இந்த ஆலயங்கள் பெறமுடியாத நிலை காணப் படுகின்றது.

வடக்கில் பல ஆலயங்கள் சேதமடைந் துள்ளன. இவற்றை புனரமைப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். பள்ளி வாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என் பனவும் பெரும் பாதிப்புக்களை சந்தித்துள் ளன. இவற்றை மீளக்கட்டியெழுப்பவும் உரிய திட்டங்கள் அவசியமானதாகும்.

சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதி கள், விடுதலை வேண்டி பல போராட்டங்களை நடத்திய நிலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.எனவே இவர்களை விடுதலை செய்ய நீதி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏ-9 வீதியும்உரியவகையில் புனரமைப்பு செய்யப்படவில்லை. அந்த வீதியூடாகவும் போக்குவரத்து செய்வதில் கஷ்டங்கள் எதிர் நோக்கப்படுகிறது. எனவே இந்த வீதியையும் உரிய வகையில் செப்பனிட நெடுஞ்சாலை கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### கொள்ளைச் சம்பவங்கள்

தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு என்பவற்றுக்கு உரிய நிதிகள் வரவு- செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள் ளன.

யாழ். குடாநாட்டில் கொள்ளைச் சம்பங் கள் தற்போது அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் இரவில் தூங்காது கண் விழித்து அச்சத்துடன் இருக்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

கொள்ளைச் சம்பவங்கள் யாழ்ப்பாணத் தில் தொடர்ந்து வருவது அரசாங்கத்திற்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தும். இதுவரை யுத்தத்தினால் நிம்மதி இழந்து வாழ்ந்து வந்த மக்கள் தற்போது இத்தகைய பீதிகளுக்கு உட்பட்டு வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தொடரக்கூடாது. கொள்ளைச் சம்பவங் களுடன் ஈடுபட்ட எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணை களை துரிதப்படுத்தி இத்தகைய கொள்ளை களை தடுக்கவேண்டும். இதற்கான பொறுப்பு படையினருக்கும் உள்ளது என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 82 அரச நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ் நிர்வாகம் செய்யப்படவுள்ளன

## ஐ.தே.கூ.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

82 அரச நிறுவனங்கள் ஜனாதிபதியின் கீழ் நிர்வாகம் செய்யப்படவுள்ளதாக ஜன நாயகத் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சரவை விடயங்கள் தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒரு தனிப்பட்ட நபரின் கீழ் பாரியளவு நிறுவனங்கள் நிர்வாகம் செய்யப்படுவதைன ஏற்றுக்கொள்ள முடியாதென ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த நிறுவனங்களை நிர்வாகம் செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்படக் கூடுமெனவும் நிதி அமைச்சின் கீழ் 46 நிறுவனங்கள் இயங்க உள்ளதாகவும் இதனை ஓர் ஆரோக்கியமான நிலைமையாக கருதப்பட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கு காணப்படும் வேலைப் பளுவினால் இவற்றை நிர்வாகம் செய்வதில் சிக்கல்கள் ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அரச காணிகளை அபகரிப்பதற்கு ஆளும்கட்சி அமைச்சர்கள் முயற்சி

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கக் காணிகளை அபகரிப்பதற்கு ஆளுயும் கட்சி அமைச்சர்களே முயற்சி மேற்கொண்டு வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முல்லேரியா ஐ.டி.எச். வைத்தியசாலைக்குச் சொந்தமான பெறுமதிமிக்க காணிகளை சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் அபகரிப்பதற்கு முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐ.டி.எச். வைத்தியசாலையில் புதிதாக இரத்த வங்கியொன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் சில அரசியல்வாதிகள் சுயநல நோக்கத்துடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா வைத்தியசாலைக்கு சொந்தமாக நூறு ஏக்கர் பெறுமதி வாய்ந்த காணிகள் காணப்படுவதாகவும் குறித்த பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு ஆளும் கட்சி அமைச்சர்கள் சில தம்மிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் கூறினார்.

இவ்வாறு அரசாங்கக் காணிகளை அபகரிப்பதற்கு முனைப்பு காட்டும் ஆளும் கட்சி அமைச்சர்ளின் பெயர் விபரங்களை அவர் அம்பலப்படுத்தவில்லை.

மேலும், வைத்தியசாலை காணிகளை சட்டவிரோதமான முறையில் கைப்பற்றியுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 153 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 153 முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் இம் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ளதாகவும் இவர்களில் 43 பேர் பெண் புலி உறுப்பினர்கள் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கான சகல விசேடபாடநெறிகள், கருத்தரங்குகள் கல்வி நடவடிக்கைகள் இந்த வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக, இவர்கள் பரீட்சையில் சிறந்த முறைகளில் செயற்படுவார்கள் என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் கருத்து வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# உதுல் பிரேமரத்னவின் பிணை விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரத்னவை பிணையில் விடுவிக்கக்கோரும் விண்ணப்பம் மீதான விசாரணையை எதிர்வரும் ஜனவரி 24 ஆம் திகதி வரை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

கடந்த ஒக்டோபர் 14ஆம் திகதி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் முன்னால் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து 2 ஆயிரத்து 834 ரூபா பெறுமதியான பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தாக உதுல் பிரேமரத்ன மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மலசலகூடம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

முறிகண்டி ஆலய சூழலில் உள்ள பொது மலசலகூடம் தற்போது புதிதாக புனரமைக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அங்கு செல்வோரிடம் பற்றுச்சீட்டு வழங்கி கட்டணம் அறவிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-10)

# கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட உள்ளூர் வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட உள்ளூர் வீதிகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இதற்கமைய கிராம சேவையாளர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது கிராம சேவையாளர்கள் தமது பகுதிகளுக்குட்பட்ட உள்ளூர் வீதிகளை முன்னுரிமைப்படுத்தி அதன் பெயர், தூரம் என்பவற்றை குறிப்பிட்டு பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதனை கிராம சேவையாளர் அலுவலக விளம்பர பலகையிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டுமென கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2-6)

# இசையாராதனை

சங்கீதப்பூஷணம் லயனல் திலகநாயகம் போலின் ஓராண்டு நினைவையொட்டி நடாத்தப்படவுள்ள இசையாராதனை எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமதி குமுதா உமாகாந்தன், குணராசா நக்கீரன், திருமதி சுகன்ஜா அரவிந்தன், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் ஆகியோர் அணி செய் கலைஞர்களுடன் இசையாராதனை நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் திலகநாயகம் போல் எழுதிய இசைத்தமிழன் தொன்மையும் திண்மையும் என்ற நூலை ஆதீனச் சுவாமிகளின் ஆசியுடன் முன்னாள் பேராயர் அதி வண ஜெபநேசன் தலைமையில் வெளியிடவுள்ளது.

நூலின் முதல் பிரதியை சாகித்தியரத்னா க.குணராசா வெளியிட அதன் பிரதியை முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு பெறுவார்.

வெளியீட்டுரையினை கலாநிதி ஜெபநேசன் ஆற்ற மதிப்பீட்டு உரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் த. றொபேட் நிகழ்த்துவார்.

திலகநாயகம் போல் யாத்து இசையமைத்துப்பாடிய செந்தமிழ் செவ்விசை இறுவெட்டும் வெளியிட்டு வைக்கப்பட வுள்ளது. (ஸ்ரீ-2)













உலக எயிட்ஸ் தின நிகழ்வுகள் நேற்று யாழ். தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பி.பசுபதிராஜா மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ. கேதீஸ்வரன், யு.என்.எச். சி.ஆர். நிறுவன யாழ். அலுவலகத் தலைவர் திருமதி இந்துமோகனதாஸ், யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கல ந்து கொண்டாவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் முற்றமுற்ற தலைசாய்க்கிறது. தலைசாய்க்க மறுக்கும் தென்னை அடியோடு சாய்கிறது.

~ அறிஞர் அண்ணாத்துரை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஜனாதிபதியை சிக்கெனப் பிடிக்கும் கூட்டமைப்பு ஆட்கொண்டு உரிமை தந்தருளுவாரோ!

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையே மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியைப் பெறுவதற்குக் காரணமாயிற்று.

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் வண்ணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விட, அதனை வேறுவிதமாகப் பிரட்டி உருட்டி தென் பகுதியில் மகிந்த ராஜபக்ஷ தரப்பு பிரசாரம் செய்ய எல்லாம் தலைகீழாய்ப் போய் சரத் பொன்சேகா இப்போது ஓட்டைச் சிறையில், ஒழுகும் மழையில் உடல்நலம் குன்றி அடைபட்டுக் கிடக்கின்றார்.

சரத் பொன்சேகாவின் இந்தப் பரிதாப நிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை ஆதரித்ததும் ஒரு காரணம் என்று கூறினால் அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

என்ன செய்வது! எல்லாம் தலைவிதியென்று விட்டுவிடலாம்.

ஆனால், இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு புது வியூகத்தை அமைத்துள்ளது. அந்தப் புது வியூகம் இரண்டாவது தடவை ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றபோது, அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வாழ்த்துத் தெரிவித்ததிலிருந்து ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஜனாதிபதி மகிந்தவின் தந்தை ராஜபக்ஷவின் நினைவுப் பேருரை நிகழ்விலும் சம்பந்தர் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரின் பாரியார், மற்றும் சபாநாயகரும் ராஜபக்ஷவின் மகனுமான சமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு அடுத்ததாக சம்பந்தருக்க முன் வரிசையில் ஆசனம் வழங்கப்பட்டிருந்தது.

சம்பந்தருக்கு அடுத்ததாகவே முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இருந்தார். தந்தையின் நினைவுப் பேருரையில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு முன்னுரிமை வழங்கும் பண்புடமையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாராளமாக நடந்து கொண்டார்.

இதற்குப் பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர், ஜனாதிபதி மீதான தனது விசுவாசத்தை நிரூபிப்பதற்காக, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோதிலும் அவ்விடத்தில் சமுகம் கொடுப்பதை தவிர்த்துக் கொண்டார்.

இப்போது வரவுசெலவுத் திட்டத்திற்கு எதிர்ப்பில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருப்பது கூட,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிக்கெனப்பிடிக்கும் முயற்சி என்பதில் ஐயமில்லை.

என்ன செய்வது! எல்லாமிழந்தால் இப்படியான முடிவுகளை எடுப்பதுதான் இயல்பு என்பதால் அதுபற்றிய விமர்சனங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னை சிக்கெனப் பிடிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அனுசரித்து தமிழர்களுக்கு 'உரிமை' என்னும் கருணை வழங்குவாரா? எல்லாம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு உடனடியாகப் பேச்சு நடத்தவேண்டும்

## ரி.என்.எல்.ஏ. செயலாளர் வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவை கண்டிக்கிறோம்.

அரசிற்கு நல்லெண்ண சமிக்ஞை காட்டுவதற்காகவே வரவுசெலவுத் திட்டத்தை எதிர்க்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் விலைவாசி உயர்வையோ அல்லது வடக்கு-கிழக்கு மற்றும் மலையகம் உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அவலத்திற்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய தீர்வையோ முன்வைக்கவில்லை.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்திற்கு அவருக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின்சார்பில்நாடாளுமன்றகுழுத்தலைவர் இரா.சம்பந்தன் வாழ்த்துத் தெரிவித்து நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தார். இருந்த பொழுதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நடத்தாது தொடர்ந்து இழுத்தடிப்திலேயே ஈடுபடுவதன் மூலம் இந்த அரசாங்கம் தமிழ் மக்களை அவமதிக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடனடியாக அரசு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

சரணாகதி அரசியலைத் தொடர்ந்து செய்ய முயற்சிக்காது தமிழ் மக்களின் நலன் கருதி நிரந்தர அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கக்கூடிய விதத்தில் அழுத்தங்களை மேற்கொள்ளவேண்டும்.

மூன்றாவதும் இறுதியுமான வரவு-செலவுத்திட்ட வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்கு இந்தியா உட்பட மேற்குலக நாடுகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கமுடியும் என அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முன்பள்ளி சிறார்களின் கலை விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் கலை விழா நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு றமணன் நிலைய அரங்கில் சமாதான நீதவான் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் லயன் டாக்டர் வை.தியாகராசா.சிறப்பு விருந்தினராக வலி கிழக்கு மத்தியஸ்தர் சபை தவிசாளர்,ஜே.பி.மயில்வாகனம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் முன்பள்ளி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன.(ஸ்ரீ-2,9)

## வலுவிழந்தோர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் சர்வதேச வலுவிழந்தோர் தின நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு எனும் முகவரியில் அமைந்துள்ள சங்க விடுதியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சகல மாற்றுவலுவுடை யோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க உதவிச் செயலாளர் செல்வி எஸ்.நிர்மலகுமாரி கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-3)

## தங்கப் பந்து தரிசனம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்ரீ அம்மா பகவான் தங்கப்பந்து தரிசனம் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

## பரீட்சைத் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தால் தரம் 12, 13 மாணவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பரீட் சைகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இம்மாதம் 9ஆம்திகதி நடைபெறும் எனதொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

# சத்தியம், தர்மம், தியாகம் மூன்றும் சேர்ந்ததே மனிதம்

சத்தியம், தர்மம் , தியாகம் மூன்றும் சேர்ந்ததே மனிதம். இதுவே மனிதன் என பெயர்பெற ஏதுவாயிற்று. ஆனால் மனிதம் என்ற மாண்புடன் வாழ வேண்டிய மனிதன் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையினராக உள்ளனர். நிந்திப்பவராக, குறைகாண்பவராக, அவதூறு செய்பவராக, நாஸ்திகனாக இதைவிட தீமையையே தமக்குரிய பாணியென தேர்ந்தெடுப்பவராக வாழும் மனிதருக்கு இறை புத்தி, இறை தோற்றம் தெரியவே தெரியாது.

தன்னை உயர்த்தும் பொருட்டும் தானே சகலதும் அறிந்தவனென்னும் செருக்ககோடும் உள்ளவர்கள் மத்தியில் இறைவா நீர் ஏன் அவதரித்தீர் என்று கேட்கத் தோன்றும்.

எங்களுக்குள் எத்தனையோ ஞானியர், யோகியர் வாழ்ந்தனர். வாழ்கின்றனர். ஆனால், மாயையில் சிக்கித்தவிக்கும் எங்களுக்கு இறைநிலை புலப்பட ஏது இல்லை. பலவருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சுவா மியரில் கடையிற் சுவாமியும் ஒருவர். ஒரு நாள் சுவாமி யாழ்.நகரத்தை அண் டிய வீதியில் போய்க் கொண்டிருந்த போது சுவாமியின் அடியாள் ஒருத்தி திருமணமாகி மூன்றுமாத காலமளவில் தனது கணவனுடன் வந்து கொண் டிருந்தாள். சுவாமியைக் கண்டு இவள் நமஸ்கரித்த போது சுவாமி – 'எடியே இவனை ஏன் கட்டினாய்' இவன் உன்னை விட்டிட்டு போகப்போகிறான் என்று சொல்ல திடீரெனப் பாய்ந்த அவள் கணவன், சுவாமிக்கு அடித்துவிட்டான். அமைதியாக தனது இருப்பிடம் சென்ற சுவாமி மதியம் சமைப்பதற்கான ஏற்பாட்டில் கறி வைப்பதற்காக வாழைக் காயை எடுத்து தனது சிஷ்யரான நன்னியர் சுவாமி என்பவரை, நன்னி! வாழைக்காயை எத்தனையாக வெட்ட என்று சுவாமி கேட்டபோது அதற்குப் பதிலளித்த நன்னியர் சுவாமி இரண்டாக்கி விடுங்கள் என்று சொன்னாராம். கடையிற் சுவாமி ஒரு வாழைக்காயை எடுத்து ஒரு வெட்டு வெட்டி இரண்டாக் கினார். அதேவேளை சுவாமிக்கு அடித் தவனின் கழுத்தை யாரோ ஒருவன் தலை வேறு உடல் வேறாக வெட்டி விட் டான். சுவாமியின் கூற்றுப்படி அவளை விட்டுவிட்டு அவன் போய்விட்டான்.

இதேபோல நமக்குள் வாழும் நம்மைக் காத்து அருள்புரியும் பரந்த தெய்வம் சாயி மாதாவை நம்மில் உணராதவர்கள் என்னும் பலர் உளர்.

ஒரு நாளைக்கு எத்தனை ஆயிரம் அற்புதங்கள், எத்தனை ஆயிரம் அருளாசிகள் ஒரு நாளைக்கு குறைந்தது பிரசாந்தி நிலையத்தில் 20 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் பகவானின் ஆசி பெறுகின்ற னர்.



பகவானின் அற்புதங்கள் எண்ணில் அடங்கா தவை மட்டுமல்ல, நினைத்துப் பார்க்கமுடியாத அதிசயமானவை.

அதைவிட அதிசயமான பகவான் பாபாவை நச்சரித்தவர்களும், எச்சரித்தவர்களும் தான் இன்று நிரந்தர, பிரிக்க முடியாத சாயி அடியார்களாக திகழ்கின்றார்கள்.

அமெரிக்கா, ஜெர்மனி, பிரித்தானியா போன்ற நாட்டின் விஞ்ஞானிகள் பாபாவை ஆய்வு செய்யவென்று வந்து இப்போ பகவானுக்கும் அவர்களுக்கும் தாய், சேய் உறவாகி புட்டபர்த்தியை விட்டு நீங்க மனமில்லாதவர்களாகி விட்டனர்.

இவை கண்டும், கேட்டும் நமக்குள் சந்தேகம் என்ற ஒரு யோசனை தோன்றுமாக இருந்தால் அது நமது முந்தைய, தற்போதைய பாவத்தின் வைப்பீடு. கொஞ்ச நஞ்சமல்ல. கெடுகுடிசொற் கேளாது சாகுடி மருந்தவியாது.

ஜெய் சாய்ராம் யாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைப்பட்டால் யுரேனியத்தை அணுகுண்டுகளாக மாற்றுவோம்

## வடகொரியா எச்சரிக்கை

(சியோல்)

நாங்கள் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி யுரேனியத்தை செறிவூட்டும் ஆலையை நிறுவி வருகிறோம் என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

யுரேனியத்தை செறிவூட்டும் ஆலையை நிறுவி வருவதாக வடகொரியா முதல் தடவையாக சர்வதேச அரங்கில் ஒப்புக்கொண்டுள்ளது.

தேவைப்பட்டால் தங்கள் வசம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அணு குண்டுகளாக தயாரிக்கவும் தயங்கமாட்டோம் என்று அந்நாடு மிரட்டல் விடுத்துள்ளது.

சமீபத்தில் வடகொரியா-தென்கொரியாவுக்கு இடையே நடந்த பீரங்கிச் சண்டையால் அங்கு போர் பதற்றம் உருவாகியது.

இதைத் தொடர்ந்து தென்கொரியாவும் அமெரிக்காவும் மஞ்சள் கடலில் கூட்டுக் கடற்படை போர் பயிற்சியை மேற்கொண்டுள்ளது பதற்றத்தை அதிகரிக்க வைத்துள்ளது.

இந்நிலையில் தங்களிடம் செறிவூட்டப்பட்ட யுரேனியம் உள்ளதாக வடகொரியா பகிரங்கமாகவே அறிவித்துள்ளது பதற்றத்தை மேலும் அதிகரிக்க வைத்துள்ளது.

வடகொரிய கம்யூனிஸ்ட் அரசின் பத்திரிகையான டோங்சின்முனின் தலையங்கத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த தலையங்கத்தில் மேலும் கூறியிருப்பது,

வடகொரியா கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. மின்சார பற்றாக்குறையால் மக்கள் திண்டாடுகின்றனர். இதற்கு தீர்வுகாணும் நோக்கில் தான் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி யுரேனியம் செறிவூட்டும் ஆலையை நிறுவி வருகிறோம்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் ஆக்கபூர்வமான செயலுக்காக யுரேனியத்தை செறி வூட்டுகிறோம். ஒரு வேளை காலத்தின் கட்டாயத்தால் இந்த யுரேனியம் அனைத்தையும் அணுகுண்டுகளாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படின் அதற்கும் வடகொரியா தயங்காது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்குமே யுரேனியத்தை செறிவூட்டும் உரிமை உள்ளது. வளரும் நாடுகள் யுரேனியத்தை செறிவூட்டக்கூடாது, அவர்களுக்கு இந்த உரிமை கிடையாது என்று சில வளர்ந்த நாடுகள் கருதுகின்றன.


இதை வடகொரியா ஏற்காது என்று அந்த தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## விக்கிலீக்ஸ் தலைவருக்கு இன்டர்போல் வலை

(லியான்)

விக்கிலீக்ஸ் தலைவர் ஜூலியான் அசாஞ்சை இன்டர்போல் பொலிஸார் தேடி வருகின்றனர். அவருக்கு ரெட் கார்னர் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுவீடன் நாடு ஜூலியான் அசாஞ் மீது கற்பழிப்பு புகார் தொடர்பாக கைது ஆணை பிறப்பித்துள்ளது. சுவீடனின் வேண்டுகோளுக்கு இணங்கி தலைமறைவாக இருக்கும் அசாஞ்சை பிடிக்க இன்டர்போல் உதவ முன்வந்துள்ளது.

நவம்பர் 18 ஆம் திகதியன்று சுவீடன் ஜூலியான் அசாஞ்சை பிடிக்க பிடியாணை பிறப்பித்தது. இன்டர்போல் அதன் உறுப்பு நாடுகளுக்கு அசாஞ் மீதான சிவப்பு நோட்டீஸ் பற்றி தகவல் அனுப்பியுள்ளது. ஜூலியான் அசாஞ் கைதாகும் பட்சத்தில் அவர் சுவீடனுக்கு நாடு கடத்தப்படவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ)




## முதுகுவலியால் அவதிப்படுபவர்களுக்கு செயற்கை முதுகெலும்பு தயாரிப்பு

## நிபுணர்கள் சாதனை

(லண்டன்)

முதுகுவலியால் அவதிப்படுகின்றவர்களுக்கு செயற்கை முதுகெலும்பு தயாரித்து நிபுணர்கள் சாதனை படைத்துள்ளனர்.

குறிப்பாக பல முதியவர்கள் இந்த நோயினால் கஷ்டப்பட்டு வருகின்றனர். முதுகெலும்பில் உள்ள இடைத்தட்டு, எலும்புகள் சேதமடைவதால் வலி ஏற்படுகிறது.

எனவே இந்த வலியை போக்குவதற்காக அறுவைச் சிகிச்சை உள்ளிட்ட பல நிவாரண வலிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது முதுகெலும்பில் சேதமடைந்துள்ள இடைத்தட்டு எலும்புகளை ஆய்வு கூடத்தில் தயாரித்து அதைப்பயன்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஸ்பெடம் செல் சிகிச்சை மூலம் உடலில் ஏற்படும் நோய்கள், சேதமடையும் திசுக்களையும் மற்றும் எலும்புகளையும் சீரமைக்க முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை எலி, நாய் போன்ற விலங்குகளிடம் நடத்தப்பட்டு வெற்றி பெற்றுள்ளது. அதேமுறை மனித உடலிலும் வெற்றி பெறும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இது விரைவில் செயற்படுத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## தீவிரவாதிகளை சுட்டுவீழ்த்த அதி நவீன துப்பாக்கி

### அமெ. விஞ்ஞானிகள் தயாரிப்பு

ஆப்கானிஸ்தானில் கடந்த 9ஆண்டுகளாக அமெரிக்க இராணுவம் முகாமிட்டுள்ளது. அங்கு தீவிரவாதிகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஆனால், அவர்களை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை.

அவர்கள் அங்குள்ள மலைப்பகுதியில் பதுங்கி மறைந்திருந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனவே, அவர்களை ஒழித்துக்கட்ட அதி நவீன துப்பாக்கியை அமெரிக்க விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கி கட்டடங்கள் மற்றும் மலைப் பகுதிகளில் மறைந்திருக்கும் தீவிரவாதிகளை தாக்கி அழிக்கும் திறன் படைத்தது. இதற்கு எக்ஸ்.எம். 25 ரக துப்பாக்கி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இது மின் என சோடாவில் ஏலியண்ட் தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இது 7 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இது விரைவில் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ளது.

இந்த நவீன ரக துப்பாக்கியால் 2 ஆயிரத்து 300 அடி தூரத்தில் உள்ள மலைப் பகுதியில் அல்லது கட்டடங்களுக்குள் பதுங்கியிருக்கும் தீவிர வாதிகளை சுட்டு அழிக்க முடியும். இந்தத் துப்பாக்கியை இந்த மாதம் முதல் பயன்படுத்த அமெரிக்க இராணுவம் முடிவு செய்துள்ளது. (ஸ்ரீ-2)

## அவுஸ்திரேலியாவில் இலங்கையருக்கு சிறை

அவுஸ்திரேலிய மாவட்ட நீதிமன்றம் இலங்கையர் ஒருவருக்கு ஒரு வருட கால சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

இணையத்தளத்தின் ஊடாக சூதாட்டத்தை மேற்கொண்டு வந்தமை தொடர்பிலேயே இவருக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது. தேவாலயம் ஒன்றின் நிதியத்தில் இருந்து இணையத்தளம் ஊடாக 1.5 மில்லியன் டொலர்களை குறித்த இலங்கையர் களவாடியுள்ளார். அத்துடன் பொதுநலவாய வங்கியில் இருந்து மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் 2இலட் சத்து 23ஆயிரத்து 404 அமெரிக்க டொலர் களை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கையரை நாடு கடத்தும் ஏது நிலை குறித்தும் பிரிஸ்பேர்ன் நீதிபதி ஆலோசனை செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இந்தியா தனக்குத்தானே தம்பட்டம்; ஹிலாரி தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் அம்பலம்

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்த உறுப்பினர் இடத்துக்கு தகுதியுடன் இருப்பதாக இந்தியா தனக்குத்தானே தம்பட்டம் அடித்துக்கொள்கிறது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தெரிவித்த கருத்தை விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இந்தக் கருத்து வெளியானதைத் தொடர்ந்து இந்தியாவைச் சமாதானப்படுத்தும் வகையில் உலகம் முன்னணி நாடாக தலைமை ஏற்க இந்தியாவுக்கு எல்லா தகுதிகளும் உள்ளன என்று அமெரிக்கா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் என்ற இணையத்தளம் பல்வேறு நாடுகளில் நடந்த இரகசிய தகவல் பரிமாற்ற விபரங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அமெரிக்க வெளியுறவுகொள்கை தொடர்பான இரகசிய பரிமாற்ற தகவல்கள் அதிக அளவில் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் இந்தியாவை கேலி செய்துள்ள விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவிக்கு இந்தியா தன்னைத் தானே முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்து வருவதாக அவர் கிண்டல் செய்துள்ளார்.

டில்லியில் உள்ள அமெரிக்கத்தூதர் திமோதி ஜே ரோய்மர் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இரகசிய தகவல்களையும் பாதுகாப்பு இரகசியங்களையும் அதிகாரபூர்வம் இல்லாமல் வெளியிடுவதை ஏற்க முடியாது விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவல்களை மனித உரிமைகளுக்கும் மனித உயிர்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

இரகசியத் தகவல் பரிமாற்றம் மற்றும் இரு நாடுகளுக்கிடையே உறவு பரிமாற்ற தொடர்புகளுக்கு இது பெரிய சவாலாக அமைந்துள்ளது என்று அவர் கூறினார்.

அண்மையில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இந்தியாவில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தை சுட்டிக்காட்டி இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உறவு சிறப்பாகவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ)



இத்தாலி பாராளுமன்றத்தில் புதிய கல்வி சீர்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போலோக்னா மாகாணத்தில் நீண்ட பேரணியை நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லேகலயில் மழை; ஆட்டத்தில் தடங்கல்

# மேற்கிந்தியத்தீவுகள் அணி போராட்டம்

(பல்லேகல)

மழையின் குறிக்கீட்டால் இலங்கை– மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்டின் முதல்நாள் ஆட்டம் பாதிப்படைந்தது.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டநேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு போட்டிகள் சமநிலையில் முடிபடைந்த நிலையில் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நேற்று பல்லேகல சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டி மழை காரணமாக இருமணிநேரம் தாமதமாக ஆரம்பமானது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்தார் லக்மல்.

ஆரம்பத் துடுப்பாட்டவீரர் கிறிஸ் ஹயிலை பூச்சியத்துடன் முதலாவது பந்திலேயே எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேற்றினார் லக்மல்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த டேவன் சிமித்–டரன் பிரவோ ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி மேற்கிந்தியத் தீவுகள் அணியை மீட்டனர்.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட்டை யிழந்து 69 ஓட்டங்களை எடுத்த போது போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.



பின்னர் மழை குறுக்கீடு செய்ய ஒருமணிநேரம் ஆட்டம் தாமதமானது.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்குப் பின் ஆட்டம் ஆரம்பமானது.

இதில் டரன் பிராவோ 84 பந்துகளில் அரைச்சதம் கடக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 100 ஓட்டங்களை எட்டியது.

மறுமுனையில் டேவன் சிமித் 94 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 115 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது டேவன் சிமித் 100 பந்துகளில் (07 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்து எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய சந்தர்போல் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளிக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்னதாகவே நிறுத்தப்பட்ட போது இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்தது.


டெஸ்ட் போட்டியில் ஒரு நாளில் 90 ஓவர்கள் வீசப்படவேண்டிய நிலையில் நேற்றைய ஆட்டம் 40 ஓவர்களுடன் நிறைவடைந்து மழையால் பாதிப்படைந்தது.

இதில் டரன் பிராவோ 63 ஓட்டங்களையும், சந்தர்போல் 11 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் லக்மல், மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம் நாளாட்டம் இன்றாகும்.

# காம்பீர், சிறிசாந்த் அபார ஆட்டம்; இந்திய அணிக்கு அடுத்த வெற்றி



(ஜெய்ப்பூர்)

அணித்தலைவர் காம்பீர், சிறிசாந்தின் அபார ஆட்டத்தினால் இந்திய அணி இரண்டாவது ஒருநாள் போட்டியில் 08 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றிய இந்திய அணி தொடர்ந்து நடை பெற்ற ஐந்து போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியிலும் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் காம்பீர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதன்டிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களையிழந்து 258 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குப்தில் 102 பந்துகளில் (03 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 70 ஓட்டங்களையும், ஸ்கொட் ஸ்ரைரிஸ் 56 பந்துகளில் (05 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 59 ஓட்களையும் அணித்தவைலர் விக்டோரி 31 ஓட்டங்களையும், வில்லியம்ஸன் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சிறிசாந்த் 04 விக்கெட்டுக்களையும், பட்டேல், அஸ்வின், பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி காம்பீரின் அதிரடிச் சதத்தின் மூலம் 43 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 259 ஓட்டங்களைக் குவித்து 08 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் கௌதம் காம்பீர் ஆட்டமிழக்காமல் 116 பந்துகளில் (18 பவுண்டரிகள் உட்பட) 138 ஓட்டங்களையும், விராட் கோலி 73 பந்துகளில் ( 08 பவுண்டரிகள் உட்பட) 64 ஓட்டங்களையும் விஜய் 33, யுவராஜ் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மைக்கேல், விக்டோரி தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு வலுச்சேர்த்த கௌதம் காம்பீர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இத் தொடரின் மூன்றாவது போட்டி நாளை மறுதினம் வரோதராவில் நடைபெறுகிறது.

## நிதி பெறும் அதிபர்கள்...

மதியின் போது பாடசாலை அபிவிருத்திக்குஎன பெருமளவுநிதிபெறப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இது தொடர்பில் பெற்றோர்கள் ஆதாரத்துடன் முறைப்பாடு செய்யாமல் பின்வாங்குகின்றனர்.

கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்ட சுற்றுநிருபத்தின்படி பாடசாலை அதிபர்கள், மாணவர் அனுமதியின் போது நிதி பெறமுடியாது.

குறிப்பாக தேசியப் பாடசாலைகளில் தரம்–1இற்கான மாணவர் அனுமதியின்போது பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் இரண்டு வாரம் காட்சிப்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டபின் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட மாணவர்களின் அனுமதியை நிறுத்தமுடியாது.

அத்துடன் தேசியப் பாடசாலைகளில் தரம் –6ற்கு மாணவர்களை அனுமதிக்கும் போது கல்வியமைச்சு தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளியின் பிரகாரம் மாணவர்களைத் தெரிவுசெய்து வழங்குகின்றது.

இவ்வாறு கல்வியமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட மாணவரின் அனுமதியை பாடசாலை அதிபர் நிறுத்தமுடியாது.

எனவே அரச தேசியப் பாடசாலைகளில் மாணவர் அனுமதியின் போது பாடசாலை அபிவிருத்திக்கென நிதிகோரும் அதிபர்கள் தொடர்பில் பெற்றோர் ஆதாரத்துடன் முறைப்பாடு செய்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் அனைத்து மாணவர்களுக்கும்இலவசக் கல்வி கிடைக்கப்பெறவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ச–5)

## வந்தது பாம்பல்ல...

தெரிவித்தார்.

இது ஒருவித விலங்கு இனத்தைச் சேர்ந்த நீல் எனப்படுகிற மீன் வகையாகும். இதுகுறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

சுனாமி போன்ற அனர்த்தங்கள் ஏற்படுகின்றவேளைகளில்மக்களுக்கு உடனடியாக அறிவிக்கும் வகையில் அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் ஏற்பாடுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளைகளில் இரவு வேளைகளில் வரும் இவை பகலில் வெளிவருவதில்லை. இரவு முழுவதும் நீரில் நீந்தும் எனத் தெரிவித்தார். (ச–5,7)

## போர்க் குற்ற விசாரணைக்கு...

தமிழ் மக்கள் மீதான ஒட்டுமொத்தப் படுகொலைகள் மற்றும் கற்பழிப்புக்கள் தொடர்பாக தம்மிடம் நூற்றுக்கணக்கான படங்களும், காணொளிகாட்சிகளும்கிடைத்துள்ளதாக சனல்– 4 நிர்வாகம் அறிவித்துள்ளது.

தம்மிடமிருந்த காணொளிகளிலிருந்து இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகைக் குழுவிற்கு ஐந்து நிமிட நேர காணொளிக் காட்சியொன்றையும் சனல்–4 அனுப்பிவைத்துள்ளது.

இந்த வீடியோக் காட்சிகள் கொடூரமானவையாக இருந்ததாகக் கூறுகிறார் ஹீயூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநரான பிராட் அடம்ஸ். இவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாறான வீடியோக்கள் வெளியாகும் சூழ்நிலையில் அவை குறித்து புலனாய்வுகளைச் செய்யவேண்டும். தொடர்ச்சியாக இலங்கை அரசு யுத்தக்குற்றங்களின் காட்சிகளை நிராகரித்துக்கொண்டே வருகிறது.

நேற்று வெளியிடப்பட்ட காட்சிகளின்படி பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக காட்சிகள் வெளியிடமுடியாத துன்பகரமான காட்சிகளாகவேயுள்ளது.

போர்க்குற்றங்களை புரிந்த இலங்கை மீது எதுவிதமான சர்வதேச விசாரணைகளும் மேற்கொள்ளப்படாதது ஏன்?

இலங்கை தொடர்பில் விரைவான விசாரணைகள் தேவை. இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்தினர் பாரிய மனித உரிமை மீறல்களை மேற்கொண்டுள்ளனர். இவை தொடர்பில் ஐ.நா.சபை விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கென குழு ஒன்றை நியமித்த போதிலும் அவை செயற்படுவதாகப் புலப்படவில்லை.

எனவே இலங்கையின் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் மிக விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சனல்–4 வெளியிட்ட காட்சிகள் தொடர்பில் ஐ.நாவின் பகுப்பாய்வு அறிக்கை வெளியிடப்பட்ட காட்சிகள் உண்மையானவை என நிரூபித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## பெயர் மாற்ற விபரத்தை சமர்ப்பிக்க பணிப்பு

(நல்லூர்)

நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு பாடசாலைகள் ஊடாக க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களில், பெயர் மாற்றம், பாடமாற்றம் குறித்த திருத்தம் மேற்கொள்ளவேண்டியவர்களின் விபரங்களை இன்று நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த விபரங்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக சமர்ப்பிக்குமாறும் நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா கேட்டுள்ளார். (ந–5)

## நாட்டின் தற்கா...

சாட்சியமளித்த சர்வமத ஒன்றிய உறுப்பினர்கள் பல வருடங்கள் நீடித்த நிச்சயமற்ற தன்மை சுதந்திர நடமாட்டத்தின் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு கடந்த 18 மாதங்களாக அமைதியான சூழல் நிலவி வருகின்றது.

இதற்காக வேண்டி நாங்கள் அனைவரும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்காலிக அமைதிநிலையானது நீடித்திருக்கும் என்பதில் எவருக்குமே நம்பிக்கையில்லை. உண்மை, நீதி, கருணை, சமாதானம் போன்றவை நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முக்கிய கூறுகள் என நம்பப்படுகிறது. அரசியல் சாசன மாற்றம் மூலமாகவே அல்லது அரசியல் தீர்வுகள் மூலமாகவே மாத்திரம் கருணையிலிருந்து மன்னிப்பு என்ற நிலைக்கு மாற்றம் பெற்று செழிப்புறுவதற்கு சாத்தியமில்லை. இலங்கையிலுள்ள பல்வேறு சமூகங்களிடையில் நல்லிணக்க சூழலை உருவாக்குவதே எமது ஒன்றியத்தின் நிலைப்பாடாகும் என்றனர். இச்சாட்சியமளிப்பில் வண. ரண் முத்துக்கல சங்கரத்ன தேரர் தமிழில் சாட்சியமளித்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புலிகளின் புலனாய்வு...

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கிய புள்ளிகளில் ஒருவரான பானு எனப்படும் செல்வராசா சீலன் என்ற சந்தேக நபரை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோதே பொலிஸார் மேற்படி தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் பிரதான நுழைவாயிலின் முன்னால் உள்ள காண் கடிகார தூண் அருகில் கடந்த 29ஆம் திகதி பானு கைது செய்யப்பட்டிருந்தார். தேசிய புலனாய்வுப் பிரிவினர் பல மாதங்களாக அவரைப் பற்றிய தகவல்களை சேகரித்து உறுதிப்படுத்திய பின்னரே பானு கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட பானு, கொழும்பின் பொருளாதார மையங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் வேவு பார்ப்பதற்காகவே கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்ததை பொலிஸ் விசாரணைகளின் போது ஏற்றுக்கொண்டிருந்தார்.

அவரைப் பற்றிய மேலதிக தகவல்களைத் திரட்டும் பொருட்டு எதிர்வரும் ஏழாம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தில் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (எ-1)

# இன்று கடு...

கூடும். அனேகமான இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை அல்லது ஓரளவு பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும் போது பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வலுத்தது...

காப்புக் காரணங்களுக்காகவே அந்த உரை இரத்துச் செய்யப்பட்டதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது. இந்த இரத்துக் காரணமாக தாம் வருத்தமடைவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

நடக்கக்கூடிய ஆர்ப்பாட்டங்களின் அளவு பெரிதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் இந்த உரை பாதுகாப்பாக நடக்கும் என்று தாம் கருதவில்லை என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (ச-5)

பணியிட வெற்றிடம்
1. நிர்வாக உத்தியோகத்தர்
2. Web Designers
3. PHP Programmers
க.பொ.த உ/த சித்தி அல்லது பட்டதாரிகள் சுயவிபரக்கோவையுடன் 04.12.2010 சனிக்கிழமை காலை 11 மணிக்கு நேரில் வரவும்
MyWay 182, Stanley Rd Jaffna 0773363456

# சனல் 4இன் வீடி...

அது உண்மையானது அல்ல.போலியானது என தொழில்நுட்பக் காரணங்களின் அடிப்படையில் அரசாங்கம் தெளிவாக உறுதிப்படுத்தியது.

சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய தற்போதைய வீடியோக் காட்சியும் மேற்படி காட்சியின் நீட்டப்பட்ட பதிப்பே அல்லாமல் வேறொன்றும் அல்ல. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயத்தை முன்னிட்டு துர்நோக்குடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பிரித்தானியாவுக்கான இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சனல் 4 தொலைக்காட்சி நேற்று முன்தினம் வெளியிட்ட வீடியோ காட்சி சர்வதேச அரசியல் அரங்கில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# பொலிஸ் நிலையத்...

மிரட்டியுள்ளார். இந்நிலையில் அவரிடமிருந்து கைக்குண்டை பொலிஸார் பறிக்க முற்பட்ட வேளையில் சந்தேக நபர் கைக்குண்டினை வெடிக்க வைத்துள்ளார்.

இவ் வெடிப்பு சம்பவத்தினால் சந்தேகநபர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி, நிர்வாக பொறுப்பதிகாரி உட்பட 14 பொலிஸ் உத்தியோகத்தர்களும் 2 பொதுமக்களும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸாருடன் சேர்ந்து இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர். (ச-5,7)

# 'போர்க் குற்றம்...

காரம் செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சனல் 4 குற்றம் சுமத்தியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு லண்டனுக்கு சென்றுள்ள நிலையில் சனல் 4 வெளியிட்டுள்ள செய்தி அரசியல் வட்டாரங்களில் தாக்கங்களை ஏற்படுத்தும் எனத் தெரியவருகிறது. லண்டனில், ஆடம்பரமான விடுதிகள் இருக்கும் பார்க் லேனில் உள்ள ஆடம்பர விடுதி ஒன்றில் ஜனாதிபதி தங்கியிருப்பதாக தெரிவித்த சனல் 4 நேற்றுமுன்தினம் அவரின் வருகையை எதிர்த்து ஹீத்துரு விமான நிலையத்தில் தமிழர்கள் நடத்தியஎதிர்ப்பினையும் காட்சிப்படுத்தி நேற்றைய செய்தி அறிக்கையில் ஒளிபரப்புச்செய்தது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைகழகத்திலிருந்து சுயாதீனமாக செயற்படும் விவாத அமைப்பு ஒன்றின் அழைப்பின் பெயரில் வந்துள்ளமையால் அவருக்கான பாதுகாப்புச்செலவினத்தை யார் பொறுப்பேற்பது என்ற விடயத்தில் பிரித்தானிய அரச மட்டத்தில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதனிடையே ஜனாதிபதி லண்டனில் தங்கியிருக்கும் போது பிரித்தானிய பாதுகாப்புச்செயலாளர் லியம் பொக்ஸ் அவர்களைச் சந்திக்க விருப்பதாகவும் சனல் 4 தெரிவித்துள்ளது. (எ-1)

59-வது பிறந்தநாள் வாழ்த்து



அகவை 59ஐ எய்தும்
தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர்
உயர்திரு. வாமதேவா தியாகேந்திரன்

எளிமையாய் வாழ்ந்து மண்மேல்
இறைவனை மறவாத உள்ளம் கொண்டு
ஏழைகள் கண்ணீர் துடைக்கும்
ஏந்தலே தியாக சீலனே
தியாகேந்திரனே! வாழி


குழந்தைகள் முதலாய் மற்று கூன் விழுந்தோற்கெல்லாம்
அளப்பெரும் அன்பு பூண்டு ஆற்றுகிறாய் அரியசேவை
அன்னையின் பெயரால் அழகுறு மண்டபம் அமைத்து
தாய் தனைப் போற்றும் தயாள சீலா வாழி

அழிவிலாக் கல்வி தன்னை அள்ளியே தினமும் நல்கி
தொழிலிலா யுவதிகட்கு தொழிலதும் தந்து நின்று
பருதி போல் இருள் அகற்றும் பாங்கினை கண்டோரெல்லாம்
நிலமிசை கதிரவன் போல் நீள் ஒளி பரப்பி வாழ
நல்லையம் பதியான் பாதம் நண்ணியே வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லச்சிறார்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம் (TCT)
TCT சிறுவர் இல்லம்
TCT பல்பொருள் விற்பனை நிலையம்
TCT விருந்தினர் விடுதி
(3157)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை மயூரன்



மாசிவன் சந்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயூரன் 30.11.2010 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நாகேஸ்வரியம்மாவின் அன்பு மகனும் சத்தியாகுமாரியின் அன்புக் கணவரும், ரதிபன், கஜிபன், கவிசா, தணிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலக்ஷ்மி, விஜயநந்தினி, செந்தில்நாதன், வரதராசன் ஆகியோரின் சகோதரனும், தயாகரன், வசந்தகுமார், ஜெயா, மதி ஆகியோரின் மைத்துனரும், சிவாஜினி, ஷாமினி, தர்சிகா, மதுஷாஜி ஆகியோரின் மாமனாரும், கஜிறா, கவிசா, கார்த்திகா, கார்த்திகன், ஆதித்தன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன் சந்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
(3156)

## திருமதி ஐயா பரிமளம்

## [மணி அக்கா]



கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சைவப் பாடசாலை ஒழுங்கை திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயா பரிமளம் 01.12.2010 புதன்கிழமை நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் அன்னலட்சுமியின் மகளும் ஐயாவின் அன்பு மனைவியும், பரராஜசிங்கம், கந்தசாமி, ஆனந்தநடராசா, மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராசா, தேவமனோகரி, ரோசினி, வைகுந்தநாதன் (ஈஸ்வர பகவான் கம்பனி), தேவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தி, தர்மசீலன், சிவகுமார், சுகன்யா, ரவி ஆகியோரின் மாமியாரும், துவாரகன், துளசி, துசி, பிரசாந், வைஸ்ணவி, நிசாந்தினி, கிரிசாந்தினி, நிரூசன், லாவண்யா, வாகீசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.12.2010) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சைவப் பாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்:
வைகுந்தநாதன் (மகன்)
T.P.:0777250033
(3158)

கட்டாரில் வேலைவாய்ப்பு
01. Carpenters
02. Masons
03. Plumbers
04. Steel fitters




(3154)
Contact No.:0779037454
0776435508

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org